# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 புரட்டாதி27செவ்வாய்க்கிழமை(13-10-1998) UTHAYAN - A Lively National Tamil Daily சுடர்:273


## சர்வசன வாக்கெடுப்பு மூலம்
# ஆட்சி நீடிப்புத் திட்டத்துக்கு சில தமிழ்க் கட்சிகள் ஆதரவு?

## கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, ஒக்ரோபர் 13

சர்வசன வாக்கெடுப்பு மூலம் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தை நீடிக்கும் திட்டத்தை சில தமிழ் கட்சிகள் முனைப்பாக ஆதரிப்பதாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

நடத்தப்பட வேண்டிய காலத்துக்கு முன்கூட்டியே பொதுத்தேர்தலை அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருப்பது தெரிந்ததே. பொதுத் தேர்தலை முன்கூட்டி நடத்த அரசு திட்டமிட்டால் அதற்குப் பதிலாக சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அரசின் பதவியை நீடிக்க முயலவேண்டும் என்று சில தமிழ்க் கட்சிகள் அரசுக்கு ஆலோசனையும் கோரிக்கையும் முன் வைத்திருப்பதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் மோதல்

பரந்தன் பகுதியில் நேற்றுக் காலை படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றதாகவும் —

அந்தச் சண்டையில் தமது தரப்பில் இரு போராளிகள் உயிரிழந்துள்ளனர் எனவும்— புலிகள் அறிவித்துள்ளனர்.

கண்ணதாஸன் (நாகமணி சிவநேசன்— முள்ளியவளை), பாரதி (ஜெயக்கொடி கமல்ராஜ்—யாழ்ப்பாணம்) ஆகிய இரு போராளிகளே உயிரிழந்துள்ளனர் என்று 'புலிகளின் குரல்' அறிவித்துள்ளது.

# பேச்சை ஆரம்பிக்கும் காலம் வந்துவிட்டது!

## அமைதி படை தளபதி கல்கட்

கொழும்பு, ஒக். 13

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கிடையாது. அரசியல் தீர்வே பொருத்தமானது. இலங்கை அரசும், புலிகளும் பேச்சு நடத்துவதற்கான நேரம் வந்து விட்டது.

இலங்கையில் இந்திய அமைதிப்படைக்கு தலைமை வகித்த தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடனான யுத்தங்களில் பங்கு பற்றி சாதனை படைத்தமைக்காக இந்திய அரசின் அதி உயர் கௌரவ விருதைப் பெற்ற ஜெனரல் கல்கட் இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தை உருவாக்கியவர் ஆவார். தென்னிந்திய இரா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மூழ்கிய கவச வாகனம்; மீட்புப் பணி தாமதம்

கொழும்பு, ஒக். 13

பருத்தித்துறை கடற் பகுதியில் 'லங்கா முடித்த' சரக்குக் கப்பல் விபத்துக்குள்ளானதில் கடலில் மூழ்கிய கவச வாகனம் இன்னும் மீட்கப்படவில்லை என்றும் மீட்புப் பணி மேலும் தாமதமாகும் எனக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி இழப்புத் தொடர்பான அரச தரப்பு தகவல்களில் குளறுபடி

## அம்பலப்படுத்துகிறார் ராணுவ ஆய்வாளர்

கொழும்பு, ஒக். 13

கிளிநொச்சி, பரந்தன் படை நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய பாரிய தாக்குதலில் இரு தரப்பிலும் ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பாக அரச தரப்பில் இருந்தும் இராணுவத் தரப்பில் இருந்தும் விடுக்கப்பட்ட அறிக்கைகள் முன்னுக்குப் பின் முரணாக அமைந்திருந்ததாக பிரபல இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

அரசின் அறிக்கைகளில் உள்ள குளறுபடிகளை 'சண்டே ரைம்ஸ்' வார இதழில் பாதுகாப்பு நிலைவரம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் பொறியியலாளரின் மனைவி கடத்தப்பட்டார்

### கொழும்பில் சம்பவம்

கொழும்பு, ஒக். 13

கொழும்பில் வசிக்கும் மரைன் எஞ்சினியரான தமிழர் ஒருவரின் அழகிய இளம் மனைவி இனந்தெரியாத குழுவினரால் நேற்று முன்தினம் இரவு 7 - 30 மணி அளவில் கொழும்பு, மோதறை காக்கைதீவுப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டார்.

கொழும்பு மவுண்ட்லவேனியாப் பகுதியில் பணியாற்றிய ஓய்வுபெற்ற பொலீஸ் அத்தியட்சகர் பி. மனோகர

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் படுகொலைகளை மத்தியஅரசு தடுக்காவிடில் தமிழகம் கொந்தளிக்கும்

### ராமதாஸ் எச்சரிக்கை

சென்னை, ஒக். 13

இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படுவதை இந்திய மத்திய அரசு பார்த்துக் கொண்டிருந்தால் தமிழகம் கொந்தளிக்கும்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் பா. ராமதாஸ் சென்னையில் நடந்த பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கைத் தமிழர் பிரச்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## அதிபர் விளக்கம்

கொழும்பு, ஒக். 13

கொழும்பில் கடந்த சனியன்று கல்லூரி வாணி விழா ஒன்றைத் தொடர்ந்து இடம்பெற்ற மோதலில் கல்லூரி மாணவன் ஒருவன் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவத்துடன் தமது கல்லூரி மாணவருக்குத் தொடர்பில்லை என்று கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் முத்துக்குமாரசாமி நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'லயன் ஏயர்' அனர்த்தம்
## உக்ரைன் நிபுணர்களின் விசாரணை நிறுத்தம்

இரணைதீவுக் கடற்பகுதியில் வீழ்ந்த 'லயன் ஏயர்' பயணிகள் விமான அனர்த்தம் குறித்து உக்ரைன் நாட்டு நிபுணர்கள் குழு இங்கு மேற்கொள்ள இருந்த விசாரணைகள் உடனடியாக இடை நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு காரணங்களாலேயே விசாரணை இடை நிறுத்தப்பட்டதாகவும்—

இதனையடுத்து 'லயன் ஏயர்' விமானத்தை தயாரித்த உக்ரைன் நிறுவன நிபுணர்களின் இலங்கை விஜயம் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாகவும்—

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# தப்பியோடிய படையினரில் 600 பேர் கடந்த ஒருவார காலத்தில் கைது!

கொழும்பு, ஒக். 13

இராணுவத்தை விட்டுத் தப்பியோடிய படையினரில் 600 பேர் கடந்த வாரம் நாட்டின் பல பகுதிகளிலும் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும் —

இராணுவத்தில் ஏற்பட்டிருக்கும் ஆளணிப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக

[10 ஆம் பக்கம் பார்க்க]

## பயணிகள் வசதி கருதி 'வாதுவவில்' ஏற்பாடுகள்

### இவ்வாரம் புறப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 13

சுமார் ஆயிரம் பயணிகளுடன் 'வாதுவ' கப்பல் இவ்வாரம் காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சரக்குக் கப்பலான வாதுவவில் பயணிகள் செல்வதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

பயணிகள் செல்வதற்கு வசதியாக கப்பலில் ஆறு தற்காலிக மலசல கூடங்கள் அமைக்கப்படுவதுடன் இரு தண்ணீர் தாங்கிகளும், ஏணிகளும் பொருத்தப்படவுள்ளன.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினால் இந்த வேலைகள் செய்யப்படவுள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

திருமதி பிரம்மஸ்ரீ

## இராஜமணிக்குருக்கள் சொர்ணாம்பாள்

திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராஜமணிக்குருக்கள் சொர்ணாம்பாள் திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் முன்னாள் கோணேஸ்வரம் கோயில் பிரதம குருக்களின் அன்பு மனைவியும், பிரம்மஸ்ரீ இராஜேஸ்வரக் குருக்களின் அன்புத்தாயாரும், மனோகரி அம்மாவின் அன்பு மாமியும், திவாகரன், பார்த்திபன் பவ்வியா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திருமலை இந்து மயானத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றன.

தகவல்:
பா. மனோரஞ்ஜசர்மா
கந்தரோடை

23, திருஞானசம்பந்தர்வீதி,
முத்துக்குமாரசாமி கோயிலடி,
திருகோணமலை.
தொலைபேசி 026- 22149 (59878)

## வைத்தியநாதர் தம்பு இராசையா

நல்லூரைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல நீர்கொழும்பு வர்த்தகர் V. T. இராசையா அவர்கள் 10 - 10 - 98 அன்று புத்தளத்தில் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், தம்பு செல்லாச்சி தம்பதிகளின் அருமை மகனும், மாணிக்கம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னம்மா, வைத்திலிங்கம், இராசலட்சுமி, காலஞ்சென்ற நல்லையா, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரஞ்சிதாதேவி, இராஜினிதேவி, தயானி, சாந்தினி ரவீந்திரன், சோதனி, சதீசன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சந்திரமோகன், இராஜகோபால், லோகநாதன், சிவசுப்பிரமணியம், ஜனராஜராஜன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10-10-98 அன்று புத்தளத்தில் நடைபெற்றன என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்;
க. சந்திரமோகன்
(மருமகன்)

3ஆம் கட்டை,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (59873)

## கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

அளவெட்டி குடவத்தையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் 12 - 10 - 98 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், கணேசானந்தன் (உகண்டா), ரதிதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், விமலா, கோபாலசூரியகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரகாஸ், யுவராணி, சபேஸ்குமார் ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்ற நாகம்மா, காலஞ்சென்ற தங்கம்மா, துரையப்பா (குருநாகல்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வேலுப்பிள்ளை (ஹற்றன்), காலஞ்சென்ற கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12 - 10 - 98 பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. சரஸ்வதி
(மனைவி)

குடவத்தை,
அளவெட்டி. (59884)

திருமதி

## பரமேஸ்வரி குலவீரசிங்கம்

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி குலவீரசிங்கம் 09. 10. 98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா (ஸண்டாக்கர்), தங்காச்சிப்பிள்ளை ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும் இளைப்பாறிய பதிவாளர் மூத்ததம்பி குலவீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், நாகேந்திரன் (லண்டன்), குலேந்திரன் (லண்டன்), கணேந்திரன் (லண்டன்), செல்வி வசந்தி குலவீரசிங்கம் (பொறியியலாளர், கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான நேசமணி மகேசன், நல்லநாயகம் நடராசா, தியாகராசா முருகேசம்பிள்ளை (முன்னாள் உதவி அரசாங்க அதிபர்), தியாகராசா சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.10.98 (புதன் கிழமை) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிட்டிதா மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மூ. குலவீரசிங்கம்
(கணவன்)
செல்வி வசந்தி
(மகள்)

குருக்கக்கட்டு ஒழுங்கை,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி. (59883)

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

பளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த எஸ். ராஜமரியசிங்கம் (வயது 24) என்பவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

பளை வைத்தியசாலையில் சடலத்தைச் சென்று பார்வையிட்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானின் உத்தரவின்பேரில் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

(ஐ-15-139)


SHAMROCK
A/L MATHS
99 புள்ளிவிபரவியல்
சிக்கல் எண்
ஆரம்பம்:- 14 / 10
Wed. 3 — 5 Thurs 4 — 6
Mr. சிவலோகநாதன்
B Sc.

★ 99 G A.Q. &
1 st in Com.
★ A/L Day Class
★ புலமைப் பரிசில்
Yr. 5
(சி/5166)

The Lyceum of
English Studies
189, ஆடிய பாதம் வீதி,
திருநெல்வேலி,
G. A. Q.
ஆங்கில இலக்கிய
வகுப்புக்கள்
ஆரம்பம் 14 - 10 - 98
பி. ப. 4-00 மணி
(புதிய நேரம்)
(59869)

ஸ்ரீ செல்வா
சினிமா
ஸ்ரான்லி றோட்.
தினசரி:- 10-30, 2-30
சூரியா- மணிவண்ணன்
பிரிதா - பிரகாஷ்ராஜ்
ஆனந்தராஜ் நடிக்கும்
சந்திப்போமா
( வீடியோ CD )
இளம் நெஞ்சங்களைக்
கொள்ளைகொண்ட படம்
(59889)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்
மம்முட்டி - அஞ்சு
விஷ்ணுவரதன் நடித்த
சத்திரிய வம்சம்
( ரீகல் )
நெஞ்சுஉருக்கும்காட்சிகள்
காட்சி: 10-30, 2-30
(59843)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
அரவிந்தசாமி
மதுபாலா ஸ்ரீவித்தியா
ஜனகராஜ் நாஸர்
நடித்த
ரோஜா
இனிய பாடல்கள்
10-30, 2-00, 6-00
(புதிய நேரம்)
(சி/5020)


3 ஆம் திகதி கரை ஒதுங்கிய

## பெண்ணின் சடலம் அரச செலவில் அடக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 13

கொழும்புத்துறைக் கடற்கரையில் கடந்த 3 ஆம் திகதி கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

சடலத்தை இனங்காண 9 நாள்களாக எவரும் முன்வராததை அடுத்தே சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

இச் சடலம் இரணைதீவுக் கடலில் விழ்ந்த 'லயன் ஏயர்' விமானத்தில் பயணம் செய்த ஒருவருடையதாக இருக்கலாம் என நம்பப்பட்டது.

(ஐ-15-139)

## ஹெந்தலவில் ஓட்டோக்கள்

வடமராட்சி, ஒக். 13

தனியாருக்கானமினிவான், ஓட்டோக்கள் உட்பட மற்றும் பல பொருள்களுடன் 'ஹெந்தல' கப்பல் நேற்று முன்தினம் (ஞாயிறு) பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

பொருள்கள் இறக்கும்பணி உடனடியாக ஆரம்பமானது.

(ஐ-173)

# மரண அறிவித்தல்கள்

## நடராசா திருச்செல்வம்

(வேலணை கிழக்கு - 2)

வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா திருச்செல்வம் 12-10-1998 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா இராசம்மாவின் அன்பு மகனும் கார்த்திகேசபிள்ளை, காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்பு மருமகனும் சரோஜினி தேவியின் பாசமிகு கணவரும் விஜிதா, சுரேந்தர் (வேலணை சேர் வை. து. ம. ம. வி.) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஸ்ரீஸ்கந்தராசா (கொழும்பு), காலஞ் சென்ற லீலாவதி, இ. தவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஜெகநாதன் (ஆசிரியர், கணித விஞ்ஞான வள நிலையம், யாழ். வலயம்—01), குலசிங்கம் (வவுனியா), சிவராசா (பிரான்ஸ்), கலாசோதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இ. தங்கராசாவின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-10-98) செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தீ. சரோஜினிதேவி (மனைவி),
ந. ஜெகநாதன் (சகோதரன்)
(கணித விஞ்ஞானவள நிலையம், வலயம் 01)

வேலணை 02. (59886)

## வல்லிபுரம் சிவப்பிரகாசம்

மருதங்கேணி நெல்லியானைப் பிறப்பிடமாகவும், புலோலி கிழக்கு கணையந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவப்பிரகாசம் 12-10-98 திங்கட்கிழமையன்று காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், சிவராசா (கனடா), பாலகிருஷ்ணன் (கொழும்பு), சிவஞானலிங்கம் (கனடா), சண்முகராஜா (ஜேர்மனி), சிவகுமார் (லண்டன்), சத்தியபாமா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானசவுந்தரி, காமரீட்டாமேரி, நந்தினி, வனிதா, இளஞ்செல்வி, இராசலிங்கம் (இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-10-98 இன்று காலை 10 மணியளவில் புலோலி கிழக்கு கணையந்தோட்டத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இராசலிங்கம்
(மருமகன்)

கணையந்தோட்டம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (சி/5168)

## திருமதி கதிரித்தம்பி சிவக்கொழுந்து

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி கதிரித்தம்பி சிவக்கொழுந்து நேற்று மாலை 4.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆயுர்வேத வைத்தியர் கதிரித்தம்பியின் அன்பு மனைவியும், தனலக்சுமி, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, பராசக்தி (இளைப்பாறிய ஆசிரியர்), சங்கரமூர்த்தி (அமெரிக்கா), கிருஷ்ணமூர்த்தி (கனடா), முருகமூர்த்தி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், வன்னியசிங்கம், சின்னப்பா (இளைப்பாறிய அதிபர்), நளாயினி (அமெரிக்கா), தேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பொன்னம்மா, காலஞ்சென்ற நாகமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாக்கியத்தின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13 - 10 - 98) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு காந்தாளம் பிட்டி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. சாந்தினி [சாந்தா]
(பேர்த்தி)

(58891)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூகோ. மீது நேட்டோ எந்நேரமும்
# பெரும் தாக்குதலை ஆரம்பிக்கலாம்!

## இறுதிநேர சமாதான முயற்சிகள் தோல்வி

லண்டன், ஒக்; 13
கொசோவோ பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து யூகோஸ்லாவியா மீது நேட்டோ எந்நேரமும் பெரும் விமானத் தாக்குதல் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொசோவோவில் இருந்து சேர்பியப்படைகளை வாபஸ் பெறும்படி ஐ. நா: பாதுகாப்புச் சபையின் தீர்மானம் கோருகிறது.

ஆனால் கொசோவோ பிரச்சினை உள்நாட்டு விவகாரம் என்று யூகோஸ்லாவிய அதிபர் மிலோஸவிச் கூறுகிறார்.

அமெரிக்கத் தூதுவர் ரிச்சர்ட்கோல் புறூக் யூகோஸ்லாவிய அதிபருடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வியடைந்துவிட்டன.

யூகோஸ்லாவிய அதிபருடன் தாம் நடத்திய பேச்சு வார்த்தைகள் நேட்டோ விமானத் தாக்குதல் பிரச்சினைக்குத் தீர்வு காணத்தவறி விட்டதாக ரிச்சர்ட் கோல்புறூக் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் நேட்டோ விமானத் தாக்குதலுக்கு தயாராக மேலும் ஆறு அமெரிக்க ராட்சத பி-52 ரக குண்டுவீச்சு விமானங்கள் லண்டனுக்கு அனுப்பப்பட்டுள்ளன. குரூஸ் ஏவுகணைகளை இவை ஏற்றிச்செல்லக் கூடியவை என்று தெரிவிக்கப்படுகிறது.

யூகோ மீதான நேட்டோ விமானத் தாக்குதலுக்கு அமெரிக்கா 260 விமானங்களை அனுப்புவதற்கு இணங்கி இருந்தது.

மேற்கண்ட பி-52 ரக குண்டு வீச்சு விமானங்களும் இவற்றுள் அடங்கும்.

மத்திய தரைக்கடலில் தரித்துள்ள விமானம் தாங்கிக் கப்பல்களிலும் அமெரிக்க தாக்குதல் விமானங்கள் தயார் நிலையில் உள்ளன. (இ)

## ருஷ்டியின் தலைக்கு 10 லட்சம் ரியால்

தெஹ்ரான் ஒக்; 13
பிரிட்டிஷ் எழுத்தாளர் சல்மான் ருஷ்டியின் தலைக்கு 10 லட்சம் ரியால் என ஈரானிய கடும் போக்கு மாணவர் குழு ஒன்று அறிவித்துள்ளது.

ருஷ்டி மீதான "பத்வா" எனப்படும் மரணதண்டனையை அமுல்படுத்தி ருஷ்டியின் தலையைக் கொய்து வரும் எவருக்கும் இச் சன்மானம் வழங்கப்படும் என இக் குழு அறிவித்துள்ளது.

ஏற்கனவே ஷியா முஸ்லிம் அமைப்பு ஒன்றினால் ருஷ்டியின் தலைக்கு 25 லட்சம் டொலர்சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (தி-ரி-10)

## உலக அரங்கில்

# அன்வரை விடுவிக்கக் கோரி மலேசியாவில் ஆர்ப்பாட்டம்

கோலாலம்பூர், ஒக் 13
மலேசிய உதவிப் பிரதமராக இருந்த அன்வர் இப்ராஹிமை விடுதலை செய்யுமாறு கோரி வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆட்களை விசாரணை இன்றி தடுப்புக்காவலில் வைக்கும் முறை மலேசியாவில் நிறுத்தப்பட வேண்டும் என்றும்—

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தை ஒழித்துவிட வேண்டும் என்றும் இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அன்வர் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டத்தை அடுத்து நடைபெற்ற கூட்டத்தில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

வழக்கறிஞர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மக்கள் வீதி மறியல்போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

அதேசமயம் அன்வரின் உள்ளூர் வழக்கறிஞர்களுக்கு உதவவும்—

வழக்கு விசாரணைகளைப் பார்வையிடவும்— சர்வதேச மனித உரிமைகள் நீதி அமைப்பின் இயக்குநர் ஷையத் முகைதீன் கோலாலம்பூர் வந்துள்ளார். இ-ரி)

## வடகொரியாவில் பெரும் உணவுப் பற்றாக்குறை

சோல், ஒக்; 13
வடகொரியாவில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையினால் அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவு ஏற்படவுள்ளது.

இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் உலக உணவுத் திட்ட உயர் அதிகாரி நலந்தா மம்மி.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடகொரியாவில் உணவுப் பண்டங்களுக்கு தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது.

இந்த ஆண்டு வயல் நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு உடற்பலமின்றி பல விவசாயிகள் விவசாயத்தைக் கைவிட்டுள்ளனர்.

நாட்டின் விவசாயத்தை சூழலுக்கேற்ற வகையில் வடகொரியா கட்டி எழுப்ப வேண்டும்.

உலக உணவுத்திட்ட அதிகாரிகளை வடகொரியாவின் 26 மாவட்டங்களுக்குச் செல்ல விடாது அந்த நாட்டு அரச அதிகாரிகள் தடை செய்துள்ளனர். இதனால் இப்பகுதிகளில் உதவிப் பணிகளை உலக உணவுத் திட்டம் நிறுத்திவைத்துள்ளது. இப்படி அவர் கூறினார்.

## மேலும் 3 சடலங்கள் ஈரான் வந்தன

தெஹ்ரான், ஒக்; 13
கடந்த ஓகஸ்ட் மாதம் தலிபான் படைகளால் கொல்லப்பட்ட ஈரானிய ராஜதந்திரிகளின் சடலங்களில் மேலும் மூன்று சடலங்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து ஈரானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ)

## பொஸ்னியாவில் புதைகுழி
## 240 முஸ்லிம்களின் சடலங்கள் மீட்பு!

குலுமினா, ஒக்; 13
1992 - 1995 ஆண்டுகளுக்கிடையே நடைபெற்ற பொஸ்னிய யுத்தத்தில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட பாரிய புதைகுழி ஒன்றிலிருந்து ஏறத்தாழ 240 பொஸ்னிய முஸ்லிம்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யூகோஸ்லாவியாவின் எல்லைக்கு அருகே அமைந்துள்ள குலுமினா கிராமத்தின் கிழக்குப் பகுதியில் மலைப்பகுதியை அண்டியுள்ள இடத்தில் இந்தப் பாரிய புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் 300 முஸ்லிம்களின் சடலங்கள் உள்ளன என்று ஆரம்பத்தில் அதிகாரிகள் கூறியிருந்தனர். "240 பேரின் சடலங்கள் இதுவரை கண்டுபிடித்துள்ளோம். அவர்கள் முஸ்லிம்கள் ஆவர். இந்தப் பகுதியில் ஏற்கனவே வசித்தவர்கள்" எனப் பொஸ்னிய முஸ்லிம் குரோஸிய சமஷ்டி அமைப்பின் காணாமற்போனோர் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் அமோர் மசோவிக் கூறினார்.

பொஸ்னியாவில் தனி பாரிய புதைகுழி ஒன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட அதிகூடிய சடலங்கள் கொண்ட பகுதி இதுவாகும். (இ-10)

## பாரதீய ஜனதா அரசுக்கு
# 5 வருடகாலமும் ஆதரவு வழங்க ஜெயலலிதா உறுதி தரவேண்டும்
## ராமதாஸ் கோரிக்கை

சென்னை, ஒக்; 13
"மத்தியில் பாரதிய ஜனதாக் கட்சிக்கு அளித்து வரும் ஆதரவு ஐந்தாண்டு காலமும் தொடரும் என்று அ. தி. மு. க கட்சிச் செயலாளர் செல்வி ஜெயலலிதா வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்."

இவ்வாறு சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எம். ராமதாஸ் கோரிக்கை விடுத்தார்.

தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மத்திய பெற்றோலியத்துறை அமைச்சருமான வாழப்பாடி ராமமூர்த்தியை அவரது அமைச்சுப் பதவியில் இருந்து விலக்கினால் மத்திய அமைச்சரவையில் இருந்து தமது கட்சி அமைச்சர் தலித்எழில்மலை உடனடியாக இராஜினாமாச் செய்வார் என்றும் ராமதாஸ் கூறினார். அப்படியான நிலை ஏற்பட்டால் தமது கட்சி பாரதிய ஜனதா அரசுக்கு வெளியில் இருந்தே ஆதரவு வழங்கும் என்றும் அவர் கூறினார்.

பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சியை தோற்கடித்து விட்டு காங்கிரஸ் கட்சி அரசமைக்க ஜெயலலிதா ஆதரவு கொடுத்தால் அதற்கு பட்டாளி மக்கள் கட்சி ஆதரவு தராது என்றும் அவர் தெரிவித்தார்.

## பட்டாஸ் வெடித்து 11பேர்பலி

ஆந்திரப் பிரதேசத்தில் பட்டாஸ் வெடித்ததில் ஆறு குழந்தைகள் உட்பட பதினொரு பேர் உயிரிழந்தனர். மூவர் காயம் அடைந்தனர்.

விஜயவாடா பவானிபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் தீபாவளிக் கொண்டாட்டத்தை முன்னிட்டு பட்டாஸ்களைக் கொளுத்தி விளையாடிக்கொண்டிருந்த போது பட்டாஸூப் பொறி அருகில் இருந்த பட்டாஸ் பையில் நெருப்புப் பட்டதனால் அப்பட்டாஸ் பைகளில் இருந்த பட்டாஸ்கள் ஒரே சமயத்தில் வெடித்ததினால் இந்த சம்பவம் இடம் பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்திலேயே பத்துப்பேர் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் மருத்துவ மனையில் உயிரிழந்தார். (இ-ரி)

## யூகோ. தாக்கப்பட்டால் ரஷ்யா உதவிக்கு வரும்

மொஸ்கோ, ஒக்; 13
நேட்டோ நாடுகள் திட்டமிட்டுள்ளபடி கொசோவோ பிரச்சினை காரணமாக யூகோஸ்லாவியா மீது விமானத் தாக்குதல் நடத்தினால் அந்த நாட்டுக்குத் தேவையான இராணுவ ஒத்துழைப்புக்களை வழங்குவது பற்றி ரஷ்யா ஆராயும் என்று ரஷ்ய இராணுவ ஜெனரல் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச இராணுவ ஒத்துழைப்புப் பிரிவுக்கான தளபதி ஜெனரல் லியோனிட் இவாஷோ தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் மேற்படி எச்சரிக்கையை விடுத்தார்.

கொசோவோ பிரச்சினை காரணமாக யூகோஸ்லாவியா மீது விதிக்கப்பட்டுள்ள இராணுவத் தடைகளையும் மீறி அந்த நாட்டுக்கு இராணுவ ரீதியான ஒத்துழைப்புக்களை வழங்குவது பற்றி ரஷ்யா ஆராயும் என்று இவாஷோ தெரிவித்துள்ளார்.

சர்வதேச சட்டங்களை மீறி சேர்பிய இலக்குகளை நேட்டோ விமானங்கள் தாக்கினால், அந்த நாட்டுக்கு எதிராக இவ்வாண்டு மார்ச் மாதம் கொண்டுவரப்பட்ட ஆயுதத் தடைகளும் செல்லுபடியற்றவையாகவே கருதப்பட வேண்டும் என அவர் மேலும் கூறினார். (இ-10)


# மீண்டும் ஒரு மாபெரும் மலிவு விற்பனை

எதிர்வரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு

வெளிநாட்டிலிருந்து பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட அனைத்து வகை புடைவைத் தினுசுகளையும் மாபெரும் மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்:

# ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரியகடை, (59874) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நகைக்கடைப் பாவனைக்குரிய சோக்கேஸ், மேசை, இரும்புக் குசன் கதிரைகள், சேதமடைந்த இரும்புப் பெட்டி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: 77, சிவன் பண்ணை வீதி, கொக்டடி, யாழ்ப்பாணம். (59862)

### வீடு விற்பனைக்கு

இல. 7/1, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விக்ரோரி பூவோகதாசன், இல. 7/1, புதுவீதி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (59866)

### காணி விற்பனைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் வண். வடமேற்கு முருகமூர்த்தி வீதியில் குடியிருப்புக்கேற்ப நன்றாகப் பராமரிக்கப்பட்ட நல்ல வருவாயுள்ள நன்னீர்க்கிணற்றுடன் கூடிய தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: பிறேம் நகைமாடம், கூளாவடி, ஆனைக்கோட்டை. (59737)

### ENGLISH MATHS

O/L கணிதம் ஆங்கிலத்தில் Distinction, Credit பெறுபேறடைய [Paper Class] உட்பட துரிதமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (59788)

### தவறிவிட்டது

மாவிசந்தி பருத்தித்துறை பிரதான வீதியில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மாலிசந்திப் பிள்ளையார் கோயில் குருக்கள் நடராசா அல்லது அல்வாய் கிழக்கு சுப்பர்வளவு சார்ச்சாரதி கே. தங்கத்துரையிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (59870)

### பரிசு

பரிசளிப்பதற்கு ஏற்ற நூல்கள் 1) யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் இடம்பெயர்வின் கதை. 2) யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல். 3) நாடகம் எழுதுவது எப்படி? விளக்கும நூல் அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதியவை. ரூபா 50. (59623)

### Spoken English

சுலபமான முறையில் இலக்கணம் இன்றி ஆங்கிலம் பயில (புதிய பிரிவு 17-10-98 சனி மாலை 2-30 இற்கு) ஒரு வகுப்பில் 10 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி. ஆசிரியர்: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (59847)

# வாந்திபேதி மீண்டும் வன்னியில் பரவும் அபாயம்

வவுனியா, ஒக். 13

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் வாந்திபேதி நோய் மீண்டும் பரவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடத்தல்தீவு மற்றும் பள்ளமடுப் பகுதிகளில் இந்த நோயினால் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

நோய்க்கு ஆளாகிய 14 பேர் விடத்தல்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும் விடத்தல்தீவு ஆஸ்பத்திரிகளில் போதிய மருந்துகளோ மருத்துவ வசதிகளோ இல்லை எனக் கூறப்படுகின்றது.

இதனை அடுத்து மன்னார் மாவட்ட சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரிகள் மருந்துகளுடன் விடத்தல்தீவுக்கு சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வாந்திபேதி நோய் பரவுவதை அடுத்து அப்பகுதிகளில் போத்தலில் அடைக்கப்பட்ட மென்பானங்கள் தவிர ஏனைய குளிர்பானங்கள் மற்றும் ஐஸ்கிறீம் வகைகள் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளன.

உணவு கையாளும் நிலையங்களில் நோய்த் தடுப்புக்கான விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்று கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளது. [இ-6-7-164]

## குளோரின் இடப்படவில்லை

செம்பியன்பற்று, ஒக். 13

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள மாமுனை, தாளையடி, செம்பியன்பற்று, குடத்தனை, மணல்பாடு பகுதிகளில் உள்ள கிணறுகளுக்கு நீண்ட காலமாக குளோரின் இடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-36)

## மருத்துவ பரிசோதனை

கொழும்புத்துறை, ஒக். 13

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த ஞாயிறு காலை 151 பேருக்கு கண் வைத்தியம் நீரிழிவு, பல், சிறுநீரகப் பரிசோதனை மற்றும் இரத்த அமுக்கப் பரிசோதனை லயன்ஸ் கழகத்தால் நடத்தப்பட்டன.

கண் பரிசோதனையின் பின் 38 பேருக்கு கண்ணாடி வழங்கப்பட்டது. (இ-30)

## ஐ. நா. தூதரகத்தினால்
# ரூ. 19 லட்சம் செலவில் 3 வேலைத் திட்டங்கள்

தென்மராட்சி, ஒக். 13

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் பளைப்பிரதேசத்தில் மேலும் மூன்று வேலைத்திட்டங்கள் சுமார் 19 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான அனுமதியை வழங்கி உள்ளதாக பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர்.

மாசார் முகாவில் வீதி திருத்த வேலைக்கு ரூபா 6 லட்சத்து 40 ஆயிரமும், தர்மக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், சோரன்பற்று கணேசாவித்தியாலயத்திலும் புதிய வகுப்பறைத் தொகுதிக் கட்டடங்களை அமைக்க தலா ரூபா 6 லட்சத்து 25 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே பளைப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் நிதி வழங்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-117)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவிகளான

ப. சரவணபவானி ப. ஞானசுமாசினி

ஆகியோரின் அன்புத்தாயார்

திருமதி

### அன்னம்மா பத்மநாதன்

அவர்கள் 05 - 10 - 98 இறைபதம் எய்தியமையை இட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2ஆம் வருட முகாமைத்துவ மாணவர்கள்,
யாழ் பல்கலைக்கழகம்.

(59882)

## 31-ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 11 — 03 — 1922



மறைவு: 13 — 09 — 1998

அமரர்

### சின்னப்பா சின்னத்தம்பி

( ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர் )

13 - 09 - 98 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கான அமரர் சின்னப்பா சின்னத்தம்பி அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினமாகிய இன்று அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

15 - 10 - 98 ஆம் திகதி வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

உடையார் வளவு,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக் கட்டுவன்.

(59865)

## ஏழாவது ஆண்டு நெஞ்சைவிட்டு நீங்காது மிளிரும் நினைவு நாள்

13 - 10 - 98

தோற்றம்: 1935 — 03 — 17



மறைவு: 1991 — 10 — 13

திருமதி

### ஞானம்மா இம்மானுவல்

ஆண்டுகள் பல பறந்தோடிற்று
தங்கள் பாசச் சுவடுகள்
நினைவுருவில் நீங்காத நினைவுகளாக
எங்கள் நெஞ்சங்களைத் தேடி
கடல் அலையாகத் தொட்டுச் செல்கின்றன.
அகல் விளக்காய், ஆனந்த ஜோதியாய்
றோஜா மலராய் எங்கள் உள்ளங்களிலும்,
இல்லங்களிலும் நிறைந்து நிற்கின்றன.

பிரிவாற்றாது கண்ணீர் மல்கும்
பாசமிகு கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

11/7, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.

(59880)


## மாபெரும் மலிவு விற்பனையும் அதிர்ஷ்டலாபச் சீட்டும்

# ★ புதிய சீமாட்டி ★

பிரதான வீதி,
நெல்லியடி.

எமது ஸ்தாபனத்தின்
10 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நேற்று 12-10-1998 முதல் 20-10-1998 வரையில் மலிவு விற்பனையும் அதிர்ஷ்டமும் காத்திருக்கின்றன.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எமது ஸ்தாபனத்தில் 1,000 ரூபாவுக்குமேல் புடைவை வகைகளைக் கொள்வனவு செய்பவர்களுக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு: பட்டுச்சாறி
2 ஆம் பரிசு: ஸ்கேட் அன் பிறவுஸ்
3 ஆம் பரிசு: சேட்
மற்றும் பத்து ஆறுதல் பரிசுகள்

20 - 10 - 1998 பிற்பகல் 4 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.
பரிசுக்குரியவர்கள் கொள்வனவு செய்த பற்றுச்சீட்டுடன் தொடர்பு கொள்ளவும். (59875)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ நடவடிக்கை மட்டும் பிரச்சினைக்குத் தீர்வாகாது!

## 77 சதவீத மக்கள் கருத்து

கொழும்பு, ஒக். 13

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இராணுவ நடவடிக்கை மட்டும் ஒரு போதும் தீர்வாக அமையப்போவதில்லையென்று 77 சதவீதமான மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தென்பகுதியில் கொழும்புப் பல்கலைக்கழகத்தால் எடுக்கப்பட்ட சுயாதீன கருத்துக் கணிப்பு ஒன்றிலேயே மக்கள் இவ்வாறு தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்துக் கணிப்பின்போது 2 ஆயிரம் பேரிடம் கருத்துக் கேட்கப்பட்டது. இவர்களில் 77 சதவீதமானவர்கள் போரால் தீர்வு ஒன்றை எட்ட முடியாது என்றும் 7 சத வீதமானவர்கள் புலிகளைத் தோற்கடிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

அரசாங்கத்தின் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்து கருத்துக் கேட்டபோது அவர்களில் அரைப்பங்கிற்கும் சற்றுக் குறைவானவர்கள் இந்தத் தீர்வுத் திட்டம் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று கூறியுள்ளனர்.

மூன்றில் ஒருபகுதியினர் மட்டுமே தீர்வுத்திட்டம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமைய உதவும் என்பதை ஏற்றுக் கொண்டார்கள்.

இதே வேளை—

அதிகாரப் பகிர்வை எதிர்ப்பவர்களிடையே இரு பிரிவினர் இருப்பதனையும் இந்த கருத்துக்கணிப்பு எடுத்துக் காட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)

## மட்டக்களப்புப் பகுதி இருளில் மூழ்கியது

### மின் விநியோகம் இல்லை

மட்டக்களப்பு, ஒக். 13

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான மின்சார விநியோகம் நேற்று முன்தினம் முற்றாகச் செயலிழந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இரு பாதைகள் வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

மட்டக்களப்பு வடக்குப் பிரதேசத்துக்கு ஹபரணை ஊடாக லக்சபானாவில் இருந்தும்—

மட்டக்களப்பு தெற்குப் பிரதேசத்துக்கு இக்கினியாகலவில் இருந்தும்— மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

கடந்த சனிக்கிழமை இரவு சந்தி வெளிப்பகுதியில் 4 மின்சாரக்கம்பங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டதால் மட்டக்களப்பு வடக்குக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

நேற்று முன்தினம்இரவு 7.30 மணியளவில் பாரிய குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டதையடுத்து ஏனைய பகுதிகளுக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கொக்கட்டிச்சோலையில் 2 ஆம் கட்ட மின்சார விநியோக வேலைகளை மேற்கொள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஒதுக்கியதாகவும்—

அங்கு மின் விநியோக வேலைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று படையினர் தெரிவித்துள்ளதாகவும் —

அதைத் தொடர்ந்தே மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும்— மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-21)

## நிலுவை மோசடியை தவிர்க்க நீர்வேலி கூ.சங்கக்கிளையில் திடீர்ப் பரிசோதனை

உரும்பிராய் ஒக். 13

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் திடீர்ப் பரிசோதனைக் குழு ஒன்று கடந்த வாரம் சங்கத்தின் கிளைகளுக்குத் திடீரென விஜயம் செய்து நிலுவைகளைப் பரிசோதனை செய்தது.

தற்போது மீளக்குடியமர்ந்தோருக்கான நிவாரண விநியோகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

நிவாரண விநியோகத்தின் போது, நிறை குறைவாக உலர் உணவு தமக்கு வழங்கப்படுவதாகப் பாவனையாளர்கள் கடந்த காலங்களில் முறையிட்டு வந்ததைத் தொடர்ந்து, இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அநேகமான கிளைகளில் நிறைகள் சரியாகப் பேணப்படுவதைக் கண்டதாகவும், ஒருசிலவற்றில் மட்டுமே சிறுசிறு நிறை குறைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுச் சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளர்கள் எச்சரிக்கப்பட்டதாகவும், இக்குழுவைச் சேர்ந்த உத்தியோகத்தர் கூறினார்.

ஒரு கிளையில் கிளை முகாமையாளர் தமக்கு உதவியாக வெளியார்களை அமர்த்தியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அது தவறு என்பது சுட்டிக்காட்டப்பட்டதுடன், அவர் தமது தேவையை முன் கூட்டியே தலைமையகத்திற்கு அறிவித்தால், தேவையான பணியாளர்கள் அங்கிருந்து அனுப்பப்படுவார்கள் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 154)

## அந்திரான் வாய்க்கால் புனரமைப்பு

வட்டுக்கோட்டை, ஒக். 13

சங்கானை, சித்தன்கேணி, வட்டு. கிழக்குப் பகுதி வயல்களில் தேங்கும் மேலதிக வெள்ளநீரை வழுக்கையாற்றுக்குக் கொண்டு செல்லும் அந்திரான் வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

தொல்புரம் பெரும்பாக உத்தியோகத்தர் குகதாஸன் விவசாய சம்மேளனங்களின் மூலமாக இந்தப் பணியை நிறைவு செய்துள்ளார்.

புனரமைப்புப் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு உலக உணவு ஸ்தாபனத்தால் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

இதே போல் வட்டுக்கோட்டை தெற்கு, அராலி மேற்குப் பகுதி ஊடாகக் கடலுக்கு நீர் செல்லும் வாய்க்காலும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-12]

## அன்பளிப்பு

கைதடி அரசினர் முதியோர் வாரம் இறுதி நாள் நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை நடைபெற்றபோது இல்லத்தில் தங்கியுள்ள சகல வயோதிபர்களுக்கும் தற்போதையமில்க்வைற்நிர்வாகி இ. தவகோபாலினால் மில்க்வைற் சவர்க்காரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (இ-30)

## பிள்ளைகளின் திறன்களை அறியும் பொறுப்பு ஆரம்பக் கல்வி ஆசிரியரிடம்

### பரிசளிப்பு விழாவில் உரை

சுன்னாகம், ஒக். 13

பிள்ளைகளது திறமைகளை அறிந்துகொள்ள நாம் முயல்வதில்லை. அவர்களது திறமைகளை இனங்கண்டு அவர்களை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கே உரியது.

உடுவில் கல்விக்கோட்ட அதிகாரி அ. தற்பரானந்தன் கடந்தசனிக்கிழமை நடைபெற்ற ஏழாலை தெற்கு அ.மி.த. க. பாடசாலையின் பரிசளிப்புவிழாவில் உரையாற்றுகையில இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விழாவிற்குபாடசாலை அதிபர் மு. செல்வஸ்தான் தலைமை வகித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

மாணவர் ஒவ்வொருவரதும் திறமைகளை இனங்காணவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உரியது. அவர்களின் திறமைகளை வெளிக்கொணர உதவவேண்டியது பாடசாலை நிர்வாகத்தின் கடமையாகும். அது மட்டுமன்றி அவர்களது திறமைகளைக் கௌரவிக்கவும் வேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் சிறப்பு மிக்க பிரஜைகளை உருவாக்க முடியும்.

மாணவர்கள் தமது பிறந்த நாளுக்கு பாடசாலையில் இனிப்புக்களைக் கொடுப்பது வழக்கமாகி விட்டது. ஆனால் ஒவ்வொரு மாணவரும் இனிப்புக்குப் பதிலாக ஒவ்வொரு பயனுள்ள நூலைத் தமது பிறந்தநாள் நினைவாக பாடசாலைக்கு அளிப்பதை ஒரு வழக்கமாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதன் மூலம் பாடசாலையில் நூலகம் சிறப்படையவும், சந்ததி சந்ததியாக மாணவர் பயன் பெறவும் முடியும் என்று தெரிவித்தார்.

வலி. வடக்கு பிரதேச சபை நூலகர் வகுமாரசாமி ஐயா, வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி அருளானந்தம் சுரேந்திரன் ஆகியோரும் உரையாற்றினர். பரிசளிப்பைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ஐ-27)

வாழ்த்துகின்றோம்

மக்கள் சேவை மூலம் மனிதம் வளர்க்கும் எங்கள் மதிப்புக்குரிய பெருமாட்டி துர்க்காதுரந்தரி

சிவத்தமிழ்ச் செல்வி

தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்கள்

யாழ். பல்கலைக் கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்றமைக்காக அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

(சி/5163)

4 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 02 — 04 — 1953



உதிர்வு 29 — 10 — 1994

திருமதி

செல்வநாயகி சிவசுந்தரம்

நவமி திதி: 13 – 10 – 1998

அன்பாலும் பாசத்தாலும் பண்பாலும்
நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே!
உமது ஆத்மா சாந்தியடைய
காசி விஸ்வநாதரை வேண்டுகின்றேன்.

அன்புள்ள கணவர் நா. சிவசுந்தரமும்,
(அலங்காரப் பந்தல் அமைப்பாளர்)
பிள்ளைகளும்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

(59588)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

வீரகத்தி மாணிக்கவாசகர்

(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம் 26 - 08 - 1910
மறைவு 12 - 09 - 1998

மனிதருள் மாணிக்கமாய் மாணிக்க உபாத்தியார் எனும் பெயரோடு
மாநிலம் போற்ற வாழ்ந்தீர் எம்பெருமகனே
எமக்கெல்லாம் வாழ்வளித்து வழிகாட்டிய பெருந்தகையே
உற்றார் உறவினர்க்கும் வேண்டியன வேண்டியாங்கு வழங்கினீரே
தெய்வத் திருப்பணிகளும் குறைவின்றி ஆற்றினீரே
உம் பணிகள் யாவும் நிறைவாக முடித்தே நீர்
நெடுந்தூக்கம் ஆனீரோ உம்மை என்றும் நாம் மறவோம்
கலங்குகின்றோம், கதறுகின்றோம் நின் திருவுருவம் காணாது.

தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:-
திரு. நா. சிவசோதி (மருமகன்),
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

(59864)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்



தெல்லிப்பழை துர்க்கை அம்மன்
தேவஸ்தான தலைவி
சிவத்தமிழ்ச் செல்வி 'துர்க்காதுரந்தரி'
செல்வி

## தங்கம்மா அப்பாக்குட்டி

J.P

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தினால்
கலாநிதி

பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். அன்னார் நீடூழி காலம் வாழ்ந்து சமய, சமூகப் பணிகளைத் தொடர்ந்தும் ஆற்ற எல்லாம் வல்ல துர்க்காதேவியை வேண்டுகின்றோம்.

தெல்லிப்பழை-துர்க்காபுரம் மத்திய
சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

(59863)

# சஞ்சிகை வெளியிடப்பட்டது

பலாலி ஆசிரிய கலாசாலையின் சைவ மாணவர்மன்றம் 'சைவ விளக்கு' என்ற சஞ்சிகை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தச் சஞ்சிகையைக் கலாசாலையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் முத்துத்தம்பி வித்தியாலய அதிபர் சு. சிவராசா வெளியிட்டு வைத்து, மதிப்பீட்டுரை நிகழ்த்தினார். (இ-27)

# பத்திரிகை திருடியவர் சிக்கினார்

வட்டுக்கோட்டை, ஒக். 13

அராலி மேற்கு சனசமூக நிலைய வாசிகசாலையில் நீண்ட நாள்களாக பத்திரிகையைத் திருடி வந்த ஒருவரை நிலையத்தைச்சேர்ந்த இளைஞர்கள் கையும் மெய்யுமாகப் பிடித்து எச்சரிக்கை செய்தனர்.

வட்டுக்கிழக்கில் வசிக்கும் மேற்படி நபர் கடந்த ஒன்றரை மாதகாலம் பகல் 11 மணிக்கு இவ்வாசிகசாலைக்கு வந்து பத்திரிகை வாசிப்பது போல் பாசாங்கு செய்து பத்திரிகையை எடுத்துச் சென்றதாக ஒப்புக்கொண்டார். அத்துடன் நஷ்டஈடாக சனசமூக நிலையத்திற்கு பத்திரிகைக்குரிய பணத்தையும் செலுத்தவும் சம்மதம் தெரிவித்தார்.

(ஐ-12)

# வாழ்த்துகின்றோம்

''கல்வியைக் கருந்தனமாய்க் காசினியில் வளர்த்து வரும் கல்விப் பணிப்பாளர்களே கனிந்து வாழ்க.''

வலயம் 1 ஸ்கந்தாவின் மைந்தன் கலாநிதி. நா.தணிகாசலம்பிள்ளை
வலயம் 2 திரு. வி. இராசையா
வலயம் 3 திரு. சி. சிவராசா
வலயம் 4 திரு. வை. செல்வராசா
வலயம் 5 ''ஸ்கந்தாவினை அலங்கரித்த'' திரு. ப. விக்கினேஸ்வரன்

அதிபர், ஆசிரியர்கள். மாணவர்கள்,
கல்லூரி ஊழியர்கள்,
யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(சி-5174)

# 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 20 – 04 – 1925



மறைவு 18 – 09 – 1998

அமரர்

## நாகநாதர் கந்தையா

(வாசையா)

(தபால் தந்தி பகுதி ஒய்வு பெற்ற ஊழியர்)

எங்களது அன்புத் தெய்வமாக இருந்து எங்களை சிறப்புடன் நல்வழிப்படுத்திச் சென்ற உங்களை ஒரு போதும் மறவோம்.

அன்பே அணிகலனாகக் கொண்டு அரவணைத்து ஆதரவு காட்டி ஆரமுதூட்டி சீரிய வாழ்விற்கு வழிகாட்டிய எமது குடும்ப விளக்கு 13 – 09 – 98 அன்று அணைந்த செய்தி கேட்டு உடனிருந்து ஆறுதல் கூறி உதவிகள் புரிந்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட யா/பல்கலைக்கழக பேராசிரியர்கள், வைத்திய கலாநிதிகள், சகல பீட விரிவுரையாளர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், தனியார், கல்வி நிலையங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் பத்திரிகை மூலமும் துண்டுப் பிரசுர மூலமும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்கட்கும், மலர் வளையங்கள், சாந்தி அஞ்சலி செலுத்தியவர்கட்கும், தந்தி மூலமும் கடித மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்கட்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த அன்புள்ளங்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன்;

இன்று (98 – 10 – 13) செவ்வாய் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி!

குடும்பத்தினர்

புது றோட்,
ஆனைக்கோட்டை.

(59856)

# நினைவஞ்சலி

இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு





அமரர்
## செ. ஞானப்பிரகாசம்

திருமதி
## ஞானம்மா ஞானப்பிரகாசம்

திதி: 13 – 10 – 1998

''நீர் உம்முடைய கையைத் திறக்க அவைகள் நன்மையால் திருப்தியாகும்''
(சங்கீதம்: 104 – 28)

செல்லப்பா குடும்பம் – கொழும்பு
ஜெயரத்தினம் குடும்பம் – இணுவில்
ஞானச்சந்திரன் குடும்பம் – வவுனியா
பரஞ்சோதி குடும்பம் – கனடா
தேவச்சந்திரன் குடும்பம் – இணுவில்
லிங்கநாதன் ஜவுளி மாளிகை – யாழ்ப்பாணம்
மகேந்திரலிங்கம் குடும்பம் – கொழும்பு

J. I. ஜெயரத்தினம்

இணுவில்.

(59798)


# வடமராட்சி மக்களுக்கொரு மகிழ்ச்சியான நற்செய்தி!

வடமராட்சி மக்களின் எண்ணற்ற வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப்பெற்ற நெல்லியடி

செல்லமுத்தூஸ் புடவை மாளிகையின் 28 ஆம் ஆண்டு நிறைவையொட்டி

## தீபாவளிப் பண்டிகைக்கான மலிவு விற்பனை

**09-10-98 தொடக்கம் 25-10-98 வரை**

நடைபெறுகின்றது என்பதை எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.
நீங்களும் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புரியும்.

## செல்லமுத்தூஸ் புடவை மாளிகை

பிரதான வீதி நெல்லியடி கரவெட்டி

(C/5147)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தலைகுனிவு

கொழும்பு சென். தோமஸ் கல்லூரி வாணி விழாவில் உண்டான தகராறு கோஷ்டிச் சண்டையாக மாறியது. அந்தக் கோஷ்டிச்சண்டையில் தமிழ் மாணவன் ஒருவன் தமிழ் மாணவனாலேயே கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கிறான்.

இந்தச் சம்பவத்தில் வாணி விழாவுக்கு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்களே அடாவடித்தனம். கொலை வெறியாட்டம் நடத்தியிருக்கிறார்கள்!

தமிழ் மாணவர்களின் ஒழுக்கம் எவ்வளவு கீழ் நிலையை அடைந்து வருகிறது என்பதற்குச் சான்று பகரும் இரண்டாவது சம்பவம் இது.

இதற்கு முன்னர் பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் வரப்பிரகாஷ் சக தமிழ் மாணவர்களாலேயே பகிடிவதை (ராகிங்) என்ற பெயரில் கொலை செய்யப்பட்டார். கொலையுண்ட வரப்பிரகாஷும், பகிடிவதையில் ஈடுபட்டுக் கொலை செய்தவர்களும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணவர்களே.

இப்போதைய கொலையில் சம்பந்தப்பட்டவர்களும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்றே அறியப்படுகிறது.

கொழும்பில் மட்டுமென்ன, வெளிநாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து வாழும் யாழ்ப்பாணத்து இளைஞர்களும் கோஷ்டிச் சண்டைகளிலும், கொலைகளிலும் அடிக்கடிஈடுபடுகிறார்கள்.

கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் யாழ்ப்பாணத்தவர்கள் சென்றேறு குடிகளாக வாழ்கிறார்கள். இவர்கள் நடத்தும் அடாவடித்தனங்கள் அந்தந்த நாட்டினருக்கு பெரும் தொல்லைகளாகி உள்ளன. தமிழ் இளைஞர்கள், யாழ். இளைஞர்கள் வன்முறைக்குண இயல்பு உள்ளவர்களாக —தங்கள் முந்திய சந்ததியினருக்கு நேர் மாறானவர்களாக — மாறியிருப்பது, மாறி வருவது பெரும் வெட்கக்கேடானதாகும்; தமிழருக்குத் தலைகுனிவுமாகும்.

யாழ்ப்பாணத்தவர்கள் ஒழுக்கம், பண்பாடு, கல்வி, கலாசாரத்தில் மேம்பாடு உடையவர்கள் என்று மற்றவர்கள் பாராட்டிய காலம் ஒன்று இருந்தது. ஆனால் இப்போது வன்முறையாளர்கள், கலகக்காரர், கொலைஞர்கள் என்ற பெயரெடுத்து முந்திய கௌரவத்தையும் மதிப்பையும் குறைக்கிறார்கள்.

யாழ்ப்பாண இளைஞர்கள் இவ்வாறு கீழ்த்தரமான நிலையை அடைவதற்கு சந்ததி இடைவெளி பிரதான காரணம் என்று நியாயப்படுத்தக் கூடாது. திருத்த முடியாதவர்கள் ஆகிவிட்டார்களே என்று கவலை கொள்வதாலும் பயனில்லை.

நாளைய இளைஞர்களாகப் போகும் இன்றைய சிறுவர்களையேனும் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வளர்ப்பதற்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள் விழித்துக் கொள்ள வேண்டும். பொறுப்பை உணர்ந்து, ஏற்றுச் செயற்பட வேண்டும். இல்லையேல் நமது சமூகம் தானாகவே சீரழியும்!



இம்மாத ஆரம்பத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருடாந்தப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது அமர்வின் முன்னர், கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்ட துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் ஆகியோரும், துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும், கைலாசபதி அரங்குக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: சிட்டு)

## அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரூ. 15 லட்சம்

யாழ்ப்பாணம், ஒக். 13

நல்லூர்ப் பிரதேதி சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வரவு- செலவுத் திட்ட நிதியில் இருந்து 15 லட்சம் ரூபாவுக்கான சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தென்னை நடுகை, மரமுந்திரிகை நடுகை, சந்தை திருத்தம், சனசமூக நிலைய கட்டட திருத்தம் என பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இத் திட்டங்கள் யாவும் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தியாக்கப்படவிருக்கின்றன. (இ-3)

# கிளிநொச்சி, மாங்குளம் கள மாற்றம்; தமிழர் பற்றிய அரசின் நிலை என்ன?

## "யுக்திய" சிங்களவார இதழ் அலசுகிறது

மாங்குளம் நகரைக் கைப்பற்றியதாகப் படையினரும் கிளிநொச்சியைக் கைப்பற்றியதாக விடுதலைப் புலிகளும் அறிவித்துள்ளனர். இரு தரப்பாரினதும் வெற்றி முழக்கங்களின் பின்னணியில் அமைந்துள்ள சோகக்கதைகளை அலசுகிறது யுக்திய சிங்கள வார இதழ்.

அக் கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

(தமிழில்: கஜனி)

'சூரியப் பிரகாசம்' நடவடிக்கையின் மூலம் யாழ். குடாநாடு கைப்பற்றப்பட்ட போது பலியான படையினரின் எண்ணிக்கை 450 மட்டுமேயாகும். இவற்றை கவனத்தில் எடுக்கும் போது கிளிநொச்சியைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையின் முக்கியத்துவம் புலனாகிறது.

இவ்வாறு கைப்பற்றிய கிளிநொச்சியை தந்திரோபாய முக்கியத்துவமற்ற நகரம் என தற்போது அரசாங்கம் மற்றும் இராணுவத் தலைவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் அன்று கிளிநொச்சிபடையினரால் கைப்பற்றப்பட்டபோது வரலாற்று வெற்றி எனப் பிரஸ்தாபிக்கப்பட்டது. அவ்வாறு பிரஸ்தாபித்தவர்கள் சிலசமயம் அதைத் தற்போது மறந்திருக்கக்கூடும். யுத்தம் நடைபெறும் வேகத்திற்கு அமைய புள்ளிவிவரங்களை மாத்திரமின்றி சொல்வதை, செய்வதைக்கூட மறக்கும் நிலை உருவாகியுள்ளது. படையினர் கிளிநொச்சியைக் கைப்பற்றியபோது விடுதலைப் புலிகளின் நிர்வாக மையத்தைக் கைப்பற்றி விடுதலைப் புலிகளைக் காட்டுக்குள் துரத்தி விட்டதாக அரசாங்கம் கொக்கரித்தது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்க வியாழக்கிழமைகளில் நடைபெறும் பத்திரிகையாளர்களின் மாநாடு கடந்த முதலாம் திகதி நடைபெற்றபோது சூடு பிடித்தது. போர்க்களத்தில் என்ன நடைபெற்றது என்பதை அறியவும் அவை தொடபாக கேள்விகளை எழுப்பவும் பத்திரிகையாளர்கள் ஆவலுடன் காத்திருந்தனர்.

ராணுவப் புலனாய்வுப் பிரிவின தலைவரும் ராணுவப் பேச்சாளருமான பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பின்வருமாறு பதிலளித்தார்.

மாங்குளத்தைக் கைப்பற்றியதானது கிளிநொச்சியைக் கைவிடுவதிலும் பார்க்க பல முக்கியத்துவங்களைக் கொண்டது. விடுதலைப் புலிகள் கிளிநொச்சியைக் கைப்பற்றியபோதிலும் தந்திரோபாய அடிப்படையில் அவர்களுக்கு பெரிய லாபம் இல்லை.

### பாடசாலைப் பெயர் மாற்றம்

பிரிகேடியர் பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்துக் கொண்டிருந்த வேளையில் கிளிநொச்சிச் சமரில் கொல்லப்பட்டு அடையாளங் காணமுடியாத அளவுக்கு பழுதடைந்த நூற்றுக்கணக்கான சிப்பாய்களின் சடலங்கள் அனுராதபுரத்திலுள்ள விஜயபுர மயானத்தில் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. எவரும் மயானத்திற்குச் செல்ல முடியாதவாறு இராணுவத்தால் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. மேலும் அப்பகுதியில் வீசிய துர்நாற்றத்தைத் தொடர்ந்து மயானத்திற்கு அண்மையில் அமைந்துள்ள ரத்நாயக்க வித்தியாலயம் உடனடியாக மூடப்பட்டது. தற்போதைய சபாநாயகர் கே. பி. இரத்நாயகாவின் நினைவாகவே அந்தப்பாடசாலைக்கு இரத்நாயகா வித்தியாலயம் எனப் பெயர் இடப்பட்டது. ஆனால் தற்போது அங்கு புதைக்கப்பட்ட படையினரின் பெயர்களையே அப்பாடசாலைக்குச் சூட்ட வேண்டும் என இராணுவ அதிகாரி ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் பத்திரிகையாளர் மகாநாட்டில் கிளிநொச்சி பற்றிய தனது கருத்துக்களை வெளியிடவில்லை. அதற்கு முதல் நாள் மாலையில் றோஸ்மிட் பிளேசிலுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இல்லத்தில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்களின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்த கருத்தையே கூறியிருந்தார்.

உண்மையில் கிளிநொச்சி பிரயோசனமற்ற நகரமா? கிளிநொச்சியைக் கைப்பற்றியதன் மூலம் மாங்குளத்தை இழந்ததை விடுதலைப் புலிகளால் தாங்கிக் கொள்ள முடியுமா? அரசின் பேச்சாளரைப் போலவே அரசியல் விமர்சகர்களின் தலைகளை உடைக்கும் கேள்விகளாக கடந்த வாரம் இவை அமைந்திருந்தன.

### யுத்தம் தொடர்கிறது இருப்பினும் புலிகள வலுவான நிலையில்

விடுதலைப் புலிகளில் மேற்கூறப்பட்ட தாக்குதல்களின் பட்டியலை அவதானிக்கும் போது யுத்த தந்திரோபாயத்தில் இந்த நான்கு இடங்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன என்பதை எவராலும் கண்டறிய முடியும். தற்போது பூநகரி, முல்லைத்தீவு மற்றும்கிளிநொச்சி ஆகியன விடுதலைப் புலிகளின் வசமே உள்ளன. விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து பரந்தனையும், கிளிநொச்சியையும் மீட்டெடுப்பதற்காக 'சத்ஜெய' என்ற பெயரில் படையினர் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர். இது முல்லைத்தீவு நகரம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையின் முதலாவது கட்டத்தில் 300 படையினரும், இரண்டாவது கட்டத்தில் 115 படையினரும், மூன்றாவது கட்டத்தில் 120 படையினரும் பலியாகியுள்ளனர். இதன்படி கிளிநொச்சியைக் கைப்பற்றிய போது மொத்தமாக ஐநூறுக்கும் அதிகமான படையினர் பலியாகியுள்ளனர்.

முன்னணி ராணுவ விமர்சகர்களில் ஒருவரான முன்னாள் விமானப்படைத் தளபதி ஹறி குணதிலகா பின்வருமாறு தெரிவிக்கிறார்:

''மாங்குளம் கைப்பற்றப்பட்டதும் கிளிநொச்சி கைவிடப்பட்டதும் ராணுவத் தரப்பைப் பொறுத்த வரையில் ஓரடி முன்னேறி மூன்றடி பின்னோக்கியதற்குச் சமமானதாகும். யாழ். கண்டி வீதியில் எந்தவொரு இடத்திலும் இவ்வாறான தாக்குதலை மேற்கொள்ளும் ஆற்றல் விடுதலைப் புலிகளுக்கு உண்டு? என்கிறார் அவர்.

'வெற்றி உறுதி' ராணுவ நடவடிக்கையானது தற்போது எதிர்நோக்கும் ஆபத்துக்கள் குறித்து அரசாங்கம் கலந்தாலோசனைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, இதுவரை விடுதலைப் புலிகள் கூறி வந்தது போல் மாங்குளத்தின் முக்கியத்துவம் குறித்து வெற்றி முழக்கமிடுகின்றது. மாங்குளத்தில் சிங்கக் கொடியை ஏற்றியதன் மூலமும் அப்பகுதிகளில் அகழிகளை அமைப்பதன் மூலமும் யுத்தத்தின் கசப்பான பக்கங்களை பொதுமக்களின் கண்களிலிருந்து மூடிமறைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### சர்வதேச சமூகத்துக்கே பிரசாரம்

யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடி ஏற்றிய சம்பவமும் கொழும்பில் அரசு விழாக் கொண்டாடிய சம்பவமும் இன்றும் சிறிலங்கா மக்களின் நினைவில் உள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியை ஏற்றிய போது யாழ். மாவட்டக் கொடியான நந்திக் கொடியை ஏற்றிய முன்னாள் நிர்வாக சேவை அதிகாரியான ராமலிங்கம் விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற விடயத்தை ஒரு சிலரே அறிந்துள்ளனர். அறிந்திருந்தாலும் கூட சிங்கள மக்களின் மனங்களில் அவ்வாறான சம்பவங்கள் பதிந்திருக்கா.

கடந்த 6 ஆம் திகதி வடமராட்சியில் கொல்லப்பட்ட ஈ. பி. டி. பி. பிரதேச சபை உறுப்பினர் கனகசபை ராஜதுரைக்கும் அந்தத் தலைவிதியே நேர்ந்துள்ளது.

விடுதலைப் புலிகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான காரணம் அவர்கள் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளும் வியத்தகு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

புரட்டாதி - 28

புதன்கிழமை

திதி: நவமி

முற்பகல்: 09. 36 வரை.

நட்சத்திரம்: பூசம்

பிற்பகல் 01.44 வரை.

ஜபநேரம்: 04 32 - 06.02

ராகுகாலம்: 12.0[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

வாழ்விலும் சரி, சாவிலும் சரி, சான்றோர்க்கு [illegible]

—சோக்ரட்டீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் போரை நிறுத்தி
# சமாதானப் பேச்சை ஆரம்பிக்குக

## 8 ஆசிரியர் சங்கங்கள் கோரிக்கை

கொழும்பு, ஒக். 13

"வடக்கு—கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்தி உடனடியாகச் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்"

இவ்வாறு எட்டு ஆசிரியர் சங்கங்கள், கூட்டாக ஜனாதிபதியிடம் கோரியுள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், தமிழ் ஆசிரியர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா ஐக்கிய ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர செய்தி ஒன்றிலேயே மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

பிரஸ்தாப எட்டு ஆசிரியர் தொழிற்சங்கங்களும் கடந்த வாரம் கொழும்பில் கூடி பல தரப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்தன.

அதன் பின் அந்த விடயங்கள் அடங்கிய மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தன.

ஏனைய முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

★ அதிபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய புதிய சம்பளத் திட்டத்தை உடன் அமுல் செய்ய வேண்டும்.

★ ஆசிரியர் சேவையில் தகுதியானவர்கள் குறிப்பிட்ட தரங்களுக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

(இ-3)

## தொழிற் சங்க நடவடிக்கைக்கு முஸ்தீபு

கொழும்பு, ஒக். 13

அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வு மற்றும் வசதிகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட அபயரத்தின குழுவின் சிபார்சுளை உடன் வெளியிட வேண்டும். இல்லையேல் தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்குவோம் என்று எட்டு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கல்வி, உயர் கல்வி அமைச்சருக்கு அறிவித்துள்ளன.

இந்தச் சிபார்சுகளை வெளியிட ஒருமாத காலக்கெடுவையும் அந்தச் சங்கங்கள் விடுத்துள்ளன.

ஒரு மாத காலத்துக்குள் இந்தச் சிபார்சுகளை அரசு வெளியிடாத பட்சத்தில் அடுத்த மாதம் 6 ஆம் திகதி கூடி தொழிற்சங்க நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படுமென்று தொழிற் சங்கப் பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நாடு முழுவதும் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க எட்டு தொழிற்சங்கங்களும் இணங்கியுள்ளன.

(இ-3)

## பஸ் நிலைய கட்டடவேலை தொடங்குவதில் தாமதம்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். நகரில் பஸ் நிலையத்தில் இரு மாடிக் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் கட்டட வேலைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பஸ் நிலையத்தில் இருமாடிக் கட்டடம் அமைக்க 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள பஸ் நிலைய கட்டடத்தின்கீழ்த் தளத்தில் உள்ள கடைகளை வேறு இடத்துக்கு இடமாற்று மாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அக்கடை உரிமையாளர் சிலர் ஏற்க மறுத்து வருவதால் கட்டட வேலைகளை மேற் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## தீபாவளி களைகட்டுகிறது

யாழ். நகரில் தீபாவளி களை கட்ட ஆரம்பித்துள்ளது.

நகரில் உள்ள கடைகளில் உடுபுடைவைகள் வாங்க மக்கள் தினமும் பெரும் அளவில் கூடுகின்றனர்.

(இ-139)

## மாணவருக்கு சிகிச்சை

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகள் தோறும் மாணவர்களுக்கு ஏற்படும் தொற்று நோய்க்கான சிகிச்சையையும், பூச்சி மருந்தினையும் வடமராட்சி கிழக்கு குடும்ப நல சேவையாளரும், அம்பன் மத்திய மருந்தக வைத்திய அதிகாரியும் இணைந்து வழங்கி வருகின்றனர்.

(இ-36)

## கி. அ. சங்கம் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி, ஒக். 13

கைதடி தென் கிழக்கு கிராமிய அபிவிருத்திச் சங்கம் கடந்த 3 ஆம்திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ. பரராசசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் புதிய நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

(இ-117)

## ஆசிரியர் போட்டிப் பரீட்சை:

# கூடுதல் புள்ளிகள் பெற்றும் நியமனம் கிடையாதோருக்கு விரைவில் நியமனம்

கொழும்பு, ஒக். 13

1996 ஆம் ஆண்டு நடந்த ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் கூடுதல் புள்ளி பெற்றும் பிரதேச செயலர் பிரிவுப் பிரச்சினை காரணமாக நியமனம் பெறாதவர்களுக்கு விரைவில் நியமனம் கிடைக்க விருக்கிறது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு ஒன்று கல்விச் சேவைக்குழு செயலாளர் ஏ. எஸ். பிரேமரத்தினாவுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து இந்த நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

கல்விச் சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் இடம் பெற்ற இந்தப் பேச்சில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ். குமரகுருதாசன், நிர்வாகச் செயலாளர் த. பஞ்சலிங்கம், எஸ். சரவணபவானந்தா ஆகியோர் பங்குபற்றினர்.

பிரதேச செயலர் பிரிவில் நியமனம்வழங்கும் கொள்கை காரணமாக யாழ். மாவட்டத்தில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற நூற்றுக்கணக்கானவர்களுக்கு இன்னும் நியமனம் கிடைக்கவில்லை என்றும் —

அவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் — தூதுக் குழுவினர் கோரிக்கை விடுத்தனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆசிரியர் வெற்றிட விவரம் கிடைக்கவில்லை என்றும் —

அந்த விவரம் கிடைத்த பின்னர் மாவட்டத்தில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு நியமனம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் — தெரிவித்தார்.

விண்ணப்பதாரி கோரிய பிரதேச செயலர் பிரிவுக்குள் நியமனம் வழங்கலாம் அல்லது மாவட்டத்துக்குள் நியமனம் வழங்கலாம். எக்காரணம் கொண்டும் வேறு மாவட்டத்துக்கு நியமனம் வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே நியமனம் கிடைத்து சேவைக் காலப் பயிற்சியை முடித்த 13 ஆசிரியர்களின் நியமனம் வடக்கு — கிழக்கு மாகாண சபையினால் ரத்துச் செய்யப்பட்டதாகவும் —

அவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் — தூதுக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

(இ-3)

## கிளிநொச்சி, மாங்குளம்...

(ஏழாம் பக்கத் தொடர்)

சிறு தாக்குதல்களாகும். சிறீலங்கா அரசுக்கு எதிராக பாரிய தாக்குதலை மேற்கொள்ளும் ஆற்றல் தமக்கு உண்டு என்பதையும் தமது சொந்த அபிலாசையான ஈழத்தை வென்றெடுக்கும் வரை அந்தப் பயணத்தை மேற்கொள்ளும் ஆற்றல் தமக்கு உண்டு என்பதையும் விடுதலைப் புலிகள் தங்கள் தாக்குதல்களின் மூலம் எடுத்துரைத்துள்ளனர்.

இந்த வகையில் விடுதலைப் புலிகளுக்குச் சவால் விடுமளவிற்கு வேறெந்த அரசியல் சக்திகளும் இல்லை.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள தமிழர்கள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு இன்று முன்னர் ஒருபோதுமில்லாத அளவிற்கு கீழ்த்தரத்திலேயே உள்ளது. அதற்குப் பதிலாக அரசாங்கம் தனது பிரசாரங்களை சர்வதேச சமூகத்திற்கே மேற்கொள்ளுகிறது. மாங்குளத்தில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் அரசுக்கு நல்ல பிரயோசனமாக அமைந்துள்ளனர். சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக தற்போது உலகில் உருவாகிவரும் புதிய சிந்தனைகளின் மத்தியில் இந்தச் சம்பவம் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திருப்பப்பட வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறாயினும் இது, தற்போது தோன்றும் விதத்தில் யுத்த — அரசியல் சமன்பாடுகளில் பாரிய மாற்றங்களை உருவாக்காது.

★

## பல்கலைக்கழக ஊழியர் தினவிழா

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். பல்கலைக்கழக ஊழியர் தின விழா நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி. கலாராஜ் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும் யாழ். பல்கலை பதிவாளர் கலாநிதி க. குணராசா, பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், பேராசிரியர் அ. சண்முகதாஸ், வைத்திய கலாநிதி இ. இராஜேந்திரபிரசாத், எந்திரி வி. விஜயரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் மரம் நடல், விளையாட்டு, கலை நிகழ்ச்சிகள், பரிசில் வழங்கல் என்பனவும் இடம்பெறும்.

(இ-ரி)

## சீரற்ற மின் விநியோகம்

கொழும்புத்துறை ஒக். 13

கொழும்புத்துறை விபுலானந்தர் வீதி- அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்மன் கோயில் வீதிப்பக்கமாகவும் வில்வெத்தெரு வீதி முழுமையாகவும் மின் விநியோகம் சீராக இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

## வாசகர் திருமுகம்

## 'ஆசிரியர் தினக்கொடி' உருவாக்கப்படவேண்டும்

1991 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் உலக ஆசிரியர் தினம் ஒக்ரோபர் 06 இல் இடம்பெற்று வருகின்றது. அதன் மூலம் ஆசிரியர் குலத்தின் பெருமை உலகில் எடுத்துக்காட்டப்படுகின்றது. ஆசிரியர் தினம் குறித்து குறிப்பாகப் பாடசாலைகளில் விழாக்கள் பலவடிவங்களில் இடம்பெறுகின்றன. ஒரு தேசியவிழாவாகவும் ஆசிரியர் தினம் அமைகின்றது.

சமுதாயத்தினால் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவதும், மாணவர்கள் ஆசிரியர்களின் திருவடிகளை வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெறுவதும் ஆசிரியர் தினத்தில் இடம்பெறவேண்டிய பிரதானவிடயங்களாகும். மாலை இடுதல், ஊர்வலம் வருதல், அன்பளிப்புகள் செய்தல், சேவையைப் பாராட்டி உரைத்தல், ஆசிரியர்களைப் போற்றும் கலை நிகழ்வுகளாலும் உணவாலும் விருந்தளித்தல் போன்ற விரும்பத்தக்க அம்சங்களின் மூலம் கௌரவிப்புகள் இடம்பெறுகின்றன. தமது மகிழ்வையும் சிறப்பையும் காட்டும் பொருட்டு தமது கலை நிகழ்வுகளையும் ஆசிரியர்கள் சமுதாயத்திற்குக் காட்டுகின்றனர். பல்வேறு அம்சங்களிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை நோக்காது, காட்டாது யாவரும் நல்லாசான்கள் என்று ஆசிரியர் குலம் மதிக்கப்படுகின்றது.

ஆனால், அத்தகைய சிறப்புடைய சமுதாயச் சிற்பிகளை, காலக் கண்ணாடிகளை, சமுதாய முன்னோடிகளைத் தெய்வமாக உணர்த்தும் ஆசிரியர்தின விழாவிலே ஆசிரியர் தினத்திற்கென ஓர் இலச்சினையுடன் கூடியகொடியை ஏற்றுவதும் அதனைப்போற்றுவதுமான பிரதான நிகழ்வுநடைபெறுவதாக இல்லை. அத்தகைய கொடி இதுவரை உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதாக இல்லை. உலகளாவிய தினம் என்பதால் சம்பந்தப்பட்டவர்களுடன் இது குறித்து தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கருதுகின்றேன்.

திருச்சி நவரத்தினம்.

அதிபர்,
கோட்டைக்காடு, அ. த. க. பாடசாலை,
சுன்னாகம்.

## வெள்ளம் ஏற்படாது தடுத்திடுவோம்

நவராத்திரி, மாரிகாலத்தின் ஆரம்பத்தில் அமைவதால் இத்தினங்களில் மழை பெய்ய ஆரம்பிக்கும். விஜயதசமி தினத்தன்று வித்தியாரம்பம் போன்ற நன்மை நல்கும் பல கருமங்கள் ஆரம்பிக்கப்படுவது மகிழ்ச்சிதரும் அதே வேளையில் வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கென அமைக்கப்பட்டிருக்கும் வெள்ள வாய்க்கால்களைக் கெடுக்கும் தீய கருமமும் ஆரம்பிக்கப்படுவது கவலை தருகிறது.

நவராத்திரி தினங்களையிட்டு இடம் பெறும் சுத்திகரிப்புச் செயற்பாடுகளின் போது வெட்டப்பட்ட மரக் கிளைகள், செடிகொடிகள், வீடுகளிலிருந்த வேண்டாப் பொருள்கள், மண்ணுடன் வெட்டி அகற்றப்பட்ட புல், நவராத்திரி தினம் தோறும் மாற்றப்பட்ட வாழைமரங்கள், தோரணங்கள், வெள்ளவாய்க்காலுக்குள் ஆங்காங்கே கொட்டப்பட்டுத் திட்டுத் திட்டாகக் காணப்படுகின்றன. இவ்வாறு வெள்ளவாய்க்காலுக்குள் கொட்டப்பட்டு அங்கே குவிக்கப்படும் குப்பைகளால் நீர் பாயும் போது குறுக்கே போடப்பட்ட வரம்புகளாக தடுப்பு அணைகளாக மாறி வெள்ளம் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் கிணறுகள் பலவற்றினதும் மேற்கட்டுகளும், மல கூடங்களின் செரிகுழிகளும் சேதம் அடைந்துள்ளன. இவற்றைச் சீர் செய்வதற்குத் தாராளமாகவும் நியாய விலையிலும் சிமெந்து கிடைக்காததனால் ஏழைகள் பலரும் செடி மறைவுகளையே மலகூடமாக பயன்படுத்துகின்றனர். இந் நிலையில் வெள்ளம் ஏற்படின் மலத்தின்மூலம் தொற்றும் வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவும். வெள்ளவாய்க்கால்களும், வீதிகளும் அத்தியாவசியமானவை என்பதை உணர்ந்து பொறுப்புடன் அவற்றைப் பேணிடுவோம்! வெள்ளம் ஏற்படாது தடுத்திடுவோம்.

ச. ஆ. கோபாலமூர்த்தி

திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித்தணிக்கைக்கு எதிராக ஐ.தே.க.போராட்டம் நடத்தும்

கொழும்பு, ஒக். 13

யுத்தம்தொடர்பான செய்தித் தணிக்கை நீக்கப்படாவிட்டால் நாடு தழுவிய அளவில் போராட்டம் நடத்தப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மருதானையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யுத்தம் தொடர்பான தகவல்களை அறியும் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது. தகவல்களை அறிதல், கருத்துப் பரிமாற்றம் செய்தல் போன்றவை யுத்தம் என்ற போர்வையில் மறுக்கப்படுகிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். அல்லது இதற்கு எதிராகப் போராட்டம் நடத்துவோம்—இப்படி ரணில் மேலும்கூறினார்.

(இ-3-10)

## லொறியில் ஏற்றப்பட்ட மரங்களுக்கு இடையே நெரியுண்டவர் மரணம்

தென்மராட்சி, ஒக். 13

லொறிக்குள் மரக்குற்றிகள் ஏற்றிக் கொண்டிருக்கையில் திடீரென அவை சரிந்ததால் லொறிக்குள் நின்றவர் மரக்குற்றிகளுக்கு இடையில் அகப்பட்டு உடல் நசிந்து பலியானார். இச்சம்பவம்கடந்த வெள்ளிக்கிழமை மந்துவிலில் இடம்பெற்றது.

மந்துவில் கிழக்கு காரைக்காட்டைச் சேர்ந்த க. செத்தூரன் (வயது 38) என்னும் ஐந்து பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

மரக்குற்றிகளுக்குள் அகப்பட்டு உடல் நெரியுண்ட இவரை ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றபோது வழியில் அவர்மரணமானார்.

(ஐ-117)

## கொடுப்பனவு இன்னும் இல்லை

வலி. வடக்கு, ஒக். 13

மின்சார சபையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அரசினால் அனுமதிக்கப்பட்ட இடர்கால ஆபத்துப் படிக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-86)

## உதைபந்தாட்ட இறுதி ஆட்டம்

வலி. வடக்கு, ஒக். 13

சண்டிலிப்பாய்க்கோட்டப் பாடசாலை மட்டத்தில் நடைபெறும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளன.

16 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி—

18 வயதுப்பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

(இ-86)

## 125 ஆவது வருட நினைவு நாள்

குருநகர், ஒக். 13

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் 125ஆவது வருட நிறைவு நாள் நிகழ்வுகள் நாளை 14ஆம் திகதியும் 23ஆம், 24ஆம் திகதிகளிலும் யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெற உள்ளன.

நாளை புதன்கிழமை நடைபெற உள்ள பரிசளிப்பு வைபவத்துக்கு யாழ். ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். விசேட விருந்தினராக யாழ். கல்வித்திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் டி. ஆர். அருமைநாயகம் கலந்து கொள்வார்.

23ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் கலை அரங்கு திறப்பும், அடைக்கலம் மலர் வெளியீடும் இடம்பெறும்.

24ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் இறுதி நாள் வைபவத்தில் இசை, நாட [illegible] தாக யாழ். புனித மரியாள் வித்தியாலய அதிபர் சி. தார்சீசியஸ் தெரிவித்தார்.

(இ-51)

## ஆண்டு 5 புலமைப் பரிசில் விமான மூலம் பெறுபேறு அனுப்ப நடவடிக்கை

யாழ். மாவட்ட மாணவர்களின் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளை விமான மூலம் அனுப்ப பரீட்சை ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த முடிவுகளைப் பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் மூலம் விமான மூலம் அனுப்ப பரீட்சை ஆணையாளர்விமானப்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார்.

பரீட்சை வினாத்தாள்கள் போன்று அத்தியாவசியமானவையாகப் பரீட்சை முடிவுகள் அமையாததால் அதிகாரி ஒருவர் மூலம் அனுப்ப விமானப் படையினர் இணங்கவில்லை. அதையடுத்தே வேறு வழியில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் பயண வசதியின்றித் தங்கியுள்ள யாழ். பிரதேச செயலர்கள் விமானப்படை விமானத்தில் பரீட்சை முடிவுகளை எடுத்து வருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பரீட்சை முடிவுகள் பெரும்பாலும் இவ்வார இறுதிக்குள் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு டி. எஸ். சேனநாயக்க மகாவித்தியாலய மாணவன் ரூபசிங்க 185 புள்ளிகளைப் பெற்றுச் சிங்கள மொழியிலும் —

திருமலை சென். மேரீஸ் கல்லூரியைச் சேர்ந்த சகிலா 181 புள்ளிகளைப் பெற்று தமிழ்மொழியிலும்—அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டப் பரீட்சை முடிவுகளில் முன்கொண்டு கிடைத்த தகவல்களின் பிரகாரம் வெளியான செய்தியில் தம்பாலை சைவப் பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த 16 பேர் சித்தியடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலைக்கே அந்த முடிவு என பின்னர் தெரிய வந்துள்ளது.

(இ-3)


## இதயபூர்வ வாழ்த்துக்கள்

1998 ஆம் ஆண்டில் நடைபெற்ற 5 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் 2 ஆவது பாடசாலையாக 47 மாணவர்களை சித்தியடையச் செய்த

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் திரு. வெ. ஞானகாந்தன், K. தவராசா (முன்னாள் அதிபர்), உப அதிபர் திரு. சு. தியாகலிங்கம், மற்றும் ஆசிரியர்களான திருமதி M. சுகிர்தா, திருமதி J. தவராசா. செல்விகள் சு. சிதாலட்சுமி, தா. குணரஞ்சினி, K. ஜெயமதி, சு. ஒப்பிலாமணி ஆகியோருக்கும் இப்பாடசாலை முன்னேற்றத்துக்கு உழைக்கும் ப. மா. சங்கத்தினருக்கும், பாடசாலை அ. சங்கத்தினருக்கும் எமது இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

செல்வன்

**சிவசுப்பிரமணியம் சிவரத்தினம் சுலக்ஷன்**

யாழ். மாவட்ட ரீதியில் 2 ஆம் இடத்தையும் (162 புள்ளிகள்) பாடசாலை ரீதியாக 1 ஆம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கு நற்பெயரை ஏற்படுத்தியமைக்காக மனமார வாழ்த்துகின்றோம்.

V. S. சிவரட்ணம்

2 'A' பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(59879)



'லயஞான வாரிதியை'

## வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து சமயப் பேரவை கலைஞர், அறிஞர் கௌரவிப்பு விழா நாயகன் மிருதங்க விரிவுரையாளர் யாழ். இராமநாதன் நுண்கலைப்பீடம்.

**திரு. சி. மகேந்திரன்**

அவர்கள் "லயஞான வாரிதி" பட்டம் பெற்றமையை இட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

2 ஆம் வருட யாழ். நுண்கலைப்பீட மாணவிகள்

(நாட்டிய மாணி)

(59885)



## யாழ்ப்பாண மாநகர சபை
## கூறு விலை

லீஸ்ரர்பெற்றர் மின்பிறப்பாக்கி திருத்தம்
மொடல் நம்பர்: ரீஎஸ்/ ரிஆர் 3 - 17.7 கேவிஏ

மேற்படி மின்பிறப்பாக்கி இயந்திரத்துக்கு பிஸ்ரன், றிங்ஸ், பியரிங்ஸ், புதிதாகப் பொருத்துவதுடன் தேவைப்படுமிடத்து வேறு உதிரிப்பாகங்கள் புதிதாக மாற்றி இயந்திரத்தை முழு வலுவுடன் இயங்கக்கூடிய வகையில் திருத்தம் செய்து தருவதற்கான கூறுவிலை எம்மால் கோரப்படுகின்றது.

கூறுவிலை முடிவு திகதி: 22-10-1998

குறிப்பு:

மேற்படி இயந்திரத்தை அலுவலக நேரத்தில் மின்சாரப்பகுதி தொழில் நுட்ப உத்தியோகத்தரின் உதவியுடன் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

(சி/5167)



## யா/ யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

வருடாந்த

## பரிசளிப்பு விழா அழைப்பு - 1998

இடம்: கல்லூரி மண்டபம், மருதனார்மடம்
காலம்: 15-10-1998 வியாழக்கிழமை
காலை 9.00 மணி

தலைவர்: திரு. சு. புண்ணியசீலன் அவர்கள்
(அதிபர்)

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
B. A. Hons (Cey), Phd, Durham, J. P.
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்

சிறப்பு விருந்தினர்: திரு. வீ. இராசையா அவர்கள்
கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்

கௌரவ விருந்தினர்:
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

பரிசில் வழங்கல்:
திருமதி இ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்

விழாவிற்கு சமுகமளித்து சிறப்பிக்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை. (59888)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



யாழ். மாவட்ட

## பேக்கரி உரிமையாளர் சங்கம்
## விசேட கூட்டம்

திகதி : 07-11-98 சனிக்கிழமை
நேரம் : காலை 10-30மணி (புதிய நேரம்)
இடம் : தலைமைச் செயலகம்
விடயம்: மாவட்ட நிர்வாக சபைத் தெரிவு

மாவட்ட செயலாளர்,
யா. மா. பே. உ. சங்கம்.

119, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5169)



## கண்ணீர் அஞ்சலி

கலைப் பிரிவைச் சேர்ந்தவர்களான
ஜேர்னாட் ரமேஸ் அவர்களின்
அன்புத் தாயார்

**ம. றெஜினா**

அவர்களின் மறைவுக்கும்
பிரமாலினி அவர்களின்
அன்புத் தந்தை

**விசித்திரலிங்கம்**

அவர்களின் மறைவுக்கும் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

2-ம் ஆண்டு கலைப்பீடமாணவர்கள் (96/97)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(59890)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளன. இதற்கென ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருள்கள் இறக்கி முடிந்ததும் முதலில் கப்பல் முழுவதும் துப்புரவு செய்யப்படும் என்றும் அதன் பின்னர் மேற்படி வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வேலைகள் யாவும் முடிவடைந்த பின்னர் கப்பல் திருகோணமலை நோக்கிப் புறப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கப்பலில் ஆயிரம் பிரயாணிகள் காங்கேசன்துறையில் வைத்து ஏற்றப்பட்டுத் திருகோணமலைக்குக்கொண்டு செல்லப்படவுள்ளனர்.

இக்கப்பலில் செல்வதற்காகத் தினமும் பெரும் எண்ணிக்கையானோர் யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

இதே வேளை —

தற்பொழுது அத்தியாவசியப் பொருள்களுடன் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள 'லங்கா முடித்த' கப்பலில் பொருள்களை இறக்கும் வேலைகள் முடிந்தவுடன் அதனையும் பயணிகள் சேவையில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5-173)

## அதிபர்..

(முதலாம் பக்கத் தொடர்)

இச் சம்பவம் தொடர்பாக நேற்றைய உதயனில் வெளியான செய்தி குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

''இச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள மற்றும் தேடப்படும் மாணவர்களுள் எவரும் எமது கல்லூரியைச் சேர்ந்தவர்கள் அல்லர்; சில வேளைகளில் அவர்கள் முன்னர் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்களாக இருக்கலாம். அத்தோடு எமது கல்லூரி மீது கல்வீச்சு எதுவும் இடம் பெறவில்லை''— என்றும் அவர் சொன்னார்.

## தப்பியோடிய...

(முதலாம் பக்கத் தொடர்)

வும் —

தப்பியோடிய படையினரைத் தேடும் நடவடிக்கைகள் நாடுமுழுவதும் நடத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தந்தப் பிரிவு கிராம சேவையாளர்களின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும்—

அடுத்த சில வாரங்களில் மேலும் பலர் கைது செய்யப்படுவர் என எதிர் பார்க்கப்படுவதாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்)

சினையில் இந்தியாவின் கொள்கையை மத்திய அரசு மாற்றிக் கொண்டுதான் ஆக வேண்டும்.

''ராஜீவ் காந்தியின் கொலையைக் காரணம் காட்டி இந்தியா இனித்தலையிட முடியாது என்று கூறக்கூடாது. தமிழ் இனத்தைச் சிங்கள அரசு அழிப்பதைத் தடுக்க வேண்டும். மத்திய அரசுஇந்தப் படுகொலையை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் தமிழகம் கொந்தளிக்கும்.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

தமது கூட்டணியில் உள்ள பிரதான கட்சியான அ. தி. மு. கவின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவைக் கண்டிக்கும் விதத்திலும் அவர் சில கருத்துக்களை வெளியிட்டார்.

அது அ. தி. மு. க. கூட்டணிக்குள் கருத்து வேறுபாடு முற்றியிருப்பதையே காட்டுவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

(உ-9)

# புளொட் மூத்த உறுப்பினர் மாறன் காலமானார்

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனின் செயலாளரும், புளொட் அமைப்பின் ஆரம்பகால உறுப்பினருமான மார்க்கண்டு தேவதாஸ் (மாறன் — வயது 39) கொழும்பு ஆஸ்பத்திரியில் காலமானார்.

தமிழ்த் தீவிரவாதக் குழுக்களினால் அரசின் பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது முதன் முதலாக நடத்தப்பட்ட ஆனைக்கோட்டைத் தாக்குதலில் பங்குபற்றியவர் இவர். 1984 இல் காங்கேசன்துறையில் வைத்து கைது செய்யப்பட்ட இவர் 1987 இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் போது விடுவிக்கப்பட்டார்.

1994 தொடக்கம் சித்தார்த்தன் எம். பியின் செயலாளர் பதவியை வகித்து வந்த இவர் கடந்த ஆறு மாதமாக வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபையின் நிர்வாகஇயக்குநராகவும் பணி புரிந்து வந்தார்.

நச்சுப்பொருள் அருந்தியதற்காக வவுனியாவில் சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் கடந்த ஒரு வாரமாக கொழும்பு நவலோகா ஆஸ்பத்திரியில் இவர் சிகிச்சை பெற்று வந்தார். [ஐ-9]

# புலி உறுப்பினர் மரணம்

கடந்த 6 ஆம் திகதி யாழ். மாவட்டம் கட்டுவன் பகுதியில் படையினர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டபோது ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என 'புலிகளின் குரல்' அறிவித்தது.

கலைத்தேவன் (ஐயாத்துரை அஜீவன் - யாழ்ப்பாணம்) என்பவரே மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

## ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

அந்தக் கோரிக்கைக்கு அரசு இணங்குமானால் அதைச் செயற்படுத்த முன்னர், வேண்டுமானால் அரசு ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம் என்றும் —

அந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு தாங்கள் பூரணஆதரவு தருவதாகவும்-

அக்கட்சிகள் தெரிவித்திருப்பதாக அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவர் தகவல் வெளியிட்டதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை எந்த நேரத்திலும் நடத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் இருப்பதால், அத்தேர்தலில் சில தமிழ்க் கட்சிகளின் ஆதரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்குத் தேவைப்படுவதைப் புரிந்து கொண்டுள்ள இத் தமிழ்க் கட்சிகள்—

அதற்கு ஒரு நிபந்தனையாகச் சர்வஜன வாக்கொடுப்பு மூலம் ஆட்சி நீடிப்பைச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருப்பதாக அந்த அமைச்சர் சுட்டிக் காட்டினார் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டது.

ஆனால் இந்த விடயத்தில் சர்வசன வாக்கெடுப்பை விரும்பும் தமிழ்க் கட்சிகள் எவை என்ற விபரத்தை அப்பத்திரிகை வெளியிடவில்லை.

ஆனால் அத்தகைய திட்டத்தைத் தாங்கள் எதிர்ப்போம் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருப்பதையும் —

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சில தமிழ்க் கட்சிகள் தங்கள் எம். பி. பதவிகளைக் காப்பாற்றுவதற்காக இத்தகைய ஆதரவை வழங்க முன்வந்திருக்கலாம் எனப் பிரேமச்சந்திரன் தெரிவித்த கருத்தையும் —

அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது. (உ)

# பேச்சை ஆரம்பிக்கும்..

(முதலாம் பக்கத் தொடர்)

னுவத்துக்கும் அவர் தலைமை வகித்துள்ளார்.

இலங்கை நிலைவரம் தொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

இலங்கையில் யுத்தம் தேவையற்ற முறையில் நீண்டு செல்கிறது. இராணுவம் யுத்தத்தினால் களைப்படைந்து விட்டது. இராணுவம் பங்கர் (பதுங்குகுழி) மனோபாவத்தை கைவிட்டு மாற்று வழிகளை நாட வேண்டும்.

கிளிநொச்சி தாக்குதல் திடீர் என ஏற்பட்ட ஒன்று என நினைக்க இடமில்லை. தாக்குதலுக்கான ஏற்பாடு இரண்டு மூன்று மாதங்களாக இடம்பெற்றிருக்கலாம். இது இலங்கை இராணுவத்துக்குத் தெரியாமல் இருந்துள்ளது.

மாங்குளம் யாழ் — கண்டி வீதியில் உள்ள முக்கியத்துவம் அல்லாத ஓர் இடமாகும். கிளிநொச்சி யாழ். நகருக்கு அண்மித்த ஒரு பகுதி ஆகும். அதனைப் புலிகள் கைப்பற்றியதன் மூலம் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலையில் உள்ளது.

மாங்குளத்தை முக்கிய கேந்திரத் தளமாக புலிகள் நினைக்கவில்லை என்பது அவர்கள் மாங்குளத்தைக் கைவிட்டுப் பின்வாங்கியதில் இருந்து தெரிகின்றது.

எந்த கெரில்லா இயக்கமும் ஓர் இடத்தை நிரந்தரமாகக் கைப்பற்றி வைத்திருக்க விரும்புவதில்லை.

கிளிநொச்சி பகுதி புலிகளால் கைப்பற்றப்பட்டிருப்பதால் ஆனையிறவு முகாமுக்கும் ஆபத்து இருக்கின்றது. கைப்பற்றிய பகுதிகளைப் பாதுகாக்க அரசு அரைவாசிக்கும் அதிகமான இராணுவத்தினரைப் பயன்படுத்துவது புத்திசாலித்தனமான செயல் அல்ல. இதனால் போராடுவதற்கு வீரர்கள் பற்றாக்குறை ஏற்படலாம்.

யாழ்—கண்டி வீதியைத் திறப்பது பொருளாதார அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும் இவ்வீதியில் ஒரு சத வீதமானாலும்இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லா விட்டால் பாதை முழுவதையும் கைப்பற்றியதில் பயன் இல்லாமல் போய் விடும்—என்று தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

# கிளிநொச்சி இழப்பு..

(முதலாம் பக்கத் தொடர்)

தொடர்பான பந்தியில் அவர் விலாவாரியாக விளக்கியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ள விடயங்களின் சுருக்கம் வருமாறு:

கிளிநொச்சிச் சமர் குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன.

தணிக்கை காரணமாக உண்மையான இழப்புகளை பத்திரிகைகளால் அம்பலப்படுத்த முடியவில்லை.

கடந்த 4 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரான பிரிகேடியர் தென்னக்கோனை மேற்கோள்காட்டி, கிளிநொச்சியில் 634 படையினர் உயிரிழந்ததாகவும், 432 பேர் காயமடைந்ததாகவும் ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டது.

ஆனால் ஐந்து நாள் கழித்து — அதே பிரிகேடியர் தென்னக்கோனைத் தலைவராகக் கொண்ட — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் இழப்புக் குறித்து வேறு விதமான அறிவிப்பை விடுத்தது. அதில் 186 படையினர் உயிரிழந்ததாகவும், 426 படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை ஐந்து நாள்களில் 448ஆலும் காயமடைந்தோரின் எண்ணிக்கை ஆறாலும் குறைந்தது எப்படி? உயிரிழந்தவர்கள் மீள உயிர்த்து எழுந்து வந்தார்களா?

கிளிநொச்சிச் சமரில் கொல்லப்பட்ட 600 படையினரின் சடலங்களை ஒரு தடவையும், 74 சடலங்களை மற்றொரு தடவையும் புலிகள் ஒப்படைத்ததை செய்தியாக வெளியிட தணிக்கை அதிகாரிகள் அனுமதியளித்தனர். அதற்குப் பின்னரும் இரண்டு தடவைகள் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டதாக செஞ்சிலுவை சர்வதேசக்குழு அதிகாரிகள் உறுதிப்படுத்திய செய்தியை தணிக்கை காரணமாக வெளியிட முடியவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையிலும் நாடாளுமன்றத்தில் அமைச்சர் அனுருத்த சமர்ப்பித்த அறிக்கையிலும் பார்த்தன், கிளிநொச்சியில் 717 புலிகள் உயிரிழந்ததாகவும் ஆயிரத்து 100 புலிகள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் அமைச்சர் அனுருத்த இன்னொரு தகவலையும் வெளியிட்டார்: புலிகளின் மொத்த வலுவில் 35 வீதத்தினர் உயிரிழந்ததாகவும் மேலும் 20 வீதத்தினர் காயமடைந்ததாகவும் அவர்தெரிவித்தார். இந்தப் புள்ளிவிபரத்தின்படி பலியான 717 புலிகள் 35வீதத்தினர் என்றால் புலிகளின் மொத்த எண்ணிக்கை இரண்டாயிரத்து 49. அதில் 717 பேர் உயிரிழந்து விட்டதால் எஞ்சியோர் ஆக ஆயிரத்து 332. அதிலும் 409 பேர் காயமடைந்து விட்டதால் இப்போது மிச்சமிருப்பவர்கள்— அமைச்சர் ரத்வத்தவின் கணிப்புப்படி — ஆக 923 பேரே.

இந்த இரண்டாயிரத்து 49 பேரைக்கொண்ட புலிகள் அணிதான் 20 ஆயிரம் பேரைக் கொண்ட இராணுவத்தை 74 கிலோ மீற்றர் நீளமான கண்டி வீதியைக் கைப்பற்ற விடாமல் 17 மாதங்களாகத் தடுத்து வருகின்றது. இந்த இரண்டாயிரத்து 49 புலிகள்தான் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு 30 ஆயிரம் பொலீஸாரை விடுவிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கிளிநொச்சிப் பேரிழப்புக்குப் பின்னர் எஞ்சியிருக்கும் 923 புலிகளை அழிப்பதற்காகத்தான் 1998 இல் பாதுகாப்புச் செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட 4 ஆயிரத்து 500 கோடி ரூபாவுக்கு மேலதிகமாக ஆயிரத்து 220 கோடி ரூபா குறைநிரப்புப் பிரேரணை மூலம் கோரப்பட்டுள்ளது.

1997 நவம்பர் முற் பகுதியில் 'சண்டே ஐலண்ட்' பத்திரிகைக்குப் பேட்டியளித்த அமைச்சர் ரத்வத்த 'புலி'களின் போராட்ட பலம் குன்றிவிட்டது; அவர்களின் ஆள்பல எண்ணிக்கை சுமார் 2 ஆயிரத்து 500 ஆகக் குறைந்துவிட்டது. அவர்கள் அனைவரும் அதிதீவிர பயங்கரவாதிகளல்லர்; அனேகமானோர் 13 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர் சிறுமியரே''—என்று தெரிவித்திருந்தார்.

ஆகவே அன்று 2 ஆயிரத்து 500 பேர் என ரத்வத்தவினால் குறிக்கப்பட்ட புலிகளின் எண்ணிக்கை இப்போது அவர் கணக்குப்படி 2 ஆயிரத்து 49 ஆக வந்திருக்கிறது. இந்தப் பத்து மாதத்தில் ஆக 451 புலிகள் தான் இறந்துள்ளனர்.

எனவே அமைச்சரின் தகவல் உண்மையானதா? அல்லது கடந்த நவம்பர் முதல் சண்டைகளின்போது இறந்த புலிகளின் எண்ணிக்கை குறித்து அதி உச்சக் கணக்கில் பாதுகாப்பு அமைச்சு வெளியிடும் தகவல்கள் உண்மையானதா?

— என்று இக்பால் அத்தாஸ் அக்கட்டுரையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

(ஐ-உ-9)

# மூழ்கிய கவச...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த சனிக்கிழமை 'லங்கா முடித்த' கப்பல் விபத்துக்குள்ளான போது கப்பலில் மேற்றளத்தில் இருந்த கவச வாகனம் கடலில் வீழ்ந்து மூழ்கியது.

கடலில் மூழ்கிய கவச வாகனத்தை மீட்கும் முயற்சியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். எனினும் கவச வாகனத்தை மீட்பதற்குச் சாதகமான கால நிலை தற்போது இல்லை எனவும் —

ஆழமான கடலில் இருந்து கவச வாகனத்தை மீட்பதற்கு வேண்டிய வசதிகளும் கடற்படையினரிடம் இல்லை எனவும் —

கடற்படை வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

அதேசமயம் கவச வாகனம் கடலில் மூழ்கிய சம்பவத்தில் மூன்று படையினர் உயிரிழந்தனர் எனவும், ஏழுபேர் காயமடைந்தனர் எனவும், 10 பேரைக் காணவில்லை எனவும் தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

(ஐ-21-9)

# தமிழ் பொறியியலாளரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

வின் மகனான ஜூட் மனோகரன் தமது மனைவியுடன் கடற்கரைப் பகுதியில் காலாற நடந்து சென்ற சமயமே, அங்கு வந்த இனந்தெரியாத குழு மனைவியைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

ஜூட் மனோகரனின் மனைவி பம்பாயைச் சேர்ந்தவர். 26வயதுப்பெண். பம்பாயில் திருமணம் முடித்துக் கொண்டு கடந்த மாதம் 30ஆம் திகதியே இவர்கள் கொழும்பு திரும்பியிருந்தனர்.

இவரை மீட்பதற்காக பொலீஸார் சந்தேகத்துக்குரிய இடங்களில் தேடுதல் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-2)

**OXFORD ENGLISH ACADEMY**

BY: MR. B. JOTHY

நெல்லியடியில்:-

4 ஆவது பிரிவு

ஆரம்பம் 20-10-1998

(முற்பகல் 9 மணி)

(அனுமதியை Maths Centre இல் பெறவும்)

பருத்தித்துறையில்:-

ஆலடிப்பிள்ளையார் வீதி, சுப்பர் மடம்.

8 ஆவது பிரிவு

ஆரம்பம் 20-10-1998

(பிற்பகல் 3 மணி)

(அனுமதியை அலுவலகத்தில் பெறவும்)

(59867)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-10-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org